வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

# ஈழநாடு

Eelanadu

02.11.2020 திங்கட்கிழமை

விலை ரூ. 20/=

## கொரோனா தடுப்பூசியை பெற கையெழுத்திட்டது இலங்கை

கொழும்பு, நவ. 02

கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொள்வதற்காக கையெழுத்திட்டுள்ள நாடுகளில் இலங்கையும் உள்ளடங்குவ தாக தெரியவருகிறது.

எனினும் 2021ஆம் ஆண்டு நடுப்பகுதி வரை கொரோனா வைரஸ் தடுப்பூசி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்று உலக சுகாதார மையம் அறிவித் துள்ளது.

கொரோனாவுக்கு எதிரான தடுப் பூசியின் பரீட்சார்த்த நடவடிக்கை 02

# இந்திய அமைச்சர் ஜெய்சங்கர் விரைவில் கொழும்பு வருவார்

## சம்பந்தனிடம் கூறினார் அந்நாட்டு தூதுவர்



கொழும்பு, நவம்பர் 02

நாட்டில் கொரோனா நெருக்கடி விரைவில் கட்டுக்குள் வரும் பட்சத்தில் குறுகிய காலப் பயணம் ஒன்றை மேற்கொண்டு இந்திய வெளிவிவாகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் கொழும்பு வரும் சாத் தியப்பாடுகள் அதிகமுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. 02



## பாடசாலைகளுக்கு தொடர்ந்தும் பூட்டு

கொழும்பு, நவ. 02

நாட்டிலுள்ள சகல பாட சாலைகளும் மறு அறிவித்தல் வரை திறக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு அறிவித் துள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமை காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சு கூறியுள்ளது.

சகல பாடசாலைகளும் எதிர்வரும் 9ஆம் திகதி கல்வி நடவடிக்கைகளுக்காகத் திறக் கப்பட இருந்தமை குறிப்பிடத் தக்கது.

## 90 வீதமானவர்களுக்கு நோய் அறிகுறி இல்லை

### சுகாதார அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

கொழும்பு, நவ. 02

நாட்டில் அடையாளம் காணப்பட்ட கொவிட் 19 வைரஸ் தொற்றாளர்களில் 90 வீதமானவர்களுக்கு நோய் அறிகுறிகள் தென்படவில்லை என சுகாதார அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் மருத்துவர் சஞ்ஜீவ முனசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் பரவியி ருந்த கொரோனா வைரஸ் தொற்றை விட இம்முறை இனங்காணப்பட்டுள்ள வைரஸ் தொற்றானது வேக மாக பரவக்கூடியதும் மிகவும் வீரியம் வாய்ந்ததெனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, தனி மைப்படுத்தல் ஊர டங்கு உத்தரவு பிறப்பிக் 02

## கிளிநொச்சியில் கடும் வறட்சி!

கிளிநொச்சி, நவ. 02

கிளிநொச்சியில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக குடிநீர் உள்ளிட்ட தேவைகளிற்காக சில பகுதிகளில் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் இந்த பிரச்னை நிலவுகின்றது.

மழைவீழ்ச்சி இதுவரை கிடைக்காமையினால் மக்கள் நீர் தேவையை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

கிளிநொச்சி கரைச்சி 02

## கொரோனா பாதிப்பு 11 ஆயிரத்தை கடந்தது

கொழும்பு, நவ. 02

நாட்டில் மேலும் 204 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று மட்டும் மொத்தமாக 397 பேருக்கு வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட் 02

## கொரோனா மரணம் 21!

கொழும்பு, நவ. 02

கொரோனா வைரஸ் தொற்றால் இலங்கை யில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மஹர பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய ஆண் ஒருவர் உயிரிழந்தார்.

சுவாசப் பிரச்னை மற்றும் இரத்த அழுத்த நோய்களினால் பாதிக்கப்பட்ட அவர் கடந்த மாதம் 23 ஆம் திகதி வெலிசறை வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டார்.

ஆரம்பத்தில் அவருக்கு மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப் 02

## மாவட்டங்களுக்கு இடையிலான பயணத்துக்கு கடும் கட்டுப்பாடு

### கொரோனா ஒழிப்பு செயலணி முடிவு



கொழும்பு, நவ. 2

மக்களின் உயிர்களைப் பாது காத்து, பொருளாதாரத்தை மோச மாக பாதிக்கவிடாமல் கொரோனா பரவுவதைத் தடுக்கும் பொருட்டு கொவிட்-19 ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி உறுப்பினர் களுடன் நேற்று ஜனாதிபதி செயல கத்தில் நடைபெற்ற கலந்துரை யாடலில் பல முடிவுகள் எடுக் கப்பட்டன. 02

## தற்போதைய நிலைக்கு பொதுமக்களே காரணம்

### குற்றம்சாட்டுகிறார் ஜனாதிபதி



கொழும்பு, நவ. 02

பொதுமக்கள் தங்களது கடமைகளை சரிவரச்செய் யாததன் காரணமாகவே தற்போதைய நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது எனக் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ளும்போது அரசு மாத்திரம் தற் 02

## மாவட்டங்களுக்கு....

முக்கியமாக, பொருட்கள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைத் தவிர்த்து மாவட்டங்களுக்கு இடையிலான பயணத்தை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

மக்களை தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு பதிலாக, அவர்களை தங்கள் சொந்த வீடுகளில் தனிமைப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் வெற்றிகரமான முடிவுகளைக் கொண்டுள்ளன.

இந்த செயல்முறையை சுகாதார மருத்துவ அதிகாரி, பொது சுகாதார ஆய்வாளர், பொலிஸார் மற்றும் இராணுவம் தொடர்ந்து கண்காணிக்கவேண்டும்.

வீட்டிலுள்ள தனிமைப்படுத்தப்பட்ட நபர்களுக்கு பி.சி.ஆர் சோதனை 10 ஆவது நாளில் செய்யப்பட வேண்டும். இதன் விளைவாக, 14 நாட்களுக்குப் பிறகு நோய்த்தொற்று இல்லாதவர்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கடந்த காலங்களில் கொவிட்-19 உடன் எந்த அனுபவமும் இல்லாத போது அரசால் மக்களை நன்றாகப் பாதுகாக்க முடிந்தது. அங்கு பின்பற்றப்பட்ட தந்திரோபாயங்கள் மற்றும் முறைகளைப் பயன்படுத்தி தற்போதைய நிலைமையைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தொடர்ச்சியான மற்றும் வழக்கமான சீரற்ற சோதனைகளைச் செய்வது முக்கியம். மேலும், அவற்றின் முடிவுகளை குறுகிய காலத்தில் கொடுக்க ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்படவேண்டும்.

தனியார் மருத்துவமனைகள் அல்லது அரசால் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர் சோதனைகள் முடிவுகள் கிடைக்கும் வரை தனிமைப்படுத்தப்பட வேண்டும் மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நடத்தப்படும் பி.சி.ஆர் சோதனைகள் சுகாதார அமைச்சினால் உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும்.

கொவிட்-19 தொற்றுக்குப் பிறகு கூட்டாளிகள் மற்றும் பகுதிகளை தனிமைப்படுத்துவது பரவுவதைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கண்டறியப்படுகிறது.

அதையும் மீறி ஊரடங்கு உத்தரவு விதிப்பது நோய் பரவுவதைத் தடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஊரடங்கு உத்தரவை கண்டிப்பாக அமுல்படுத்துமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

பொருட்கள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளைத் தவிர்த்து மாவட்டங்களுக்கு இடையிலான பயணத்தை நிறுத்தவும் முடிவு செய்யப்பட்டது.

பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஜனாதிபதி பணிக்குழுவின் தலைவர் பசில் ராஜபக்ஷ, கடந்த காலங்களைப் போலவே ஊரடங்கு உத்தரவு காலத்திலும் அத்தியாவசிய பொருட்கள் விநியோகிக்கப்படும் என்று இதன்போது கூறினார்.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம நிலதாரிஸ் மற்றும் உள்ளூராட்சி பிரதிநிதிகளுக்கு இந்தப் பொறுப்புகளை வழங்குவதன் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்றும், மாதாந்திர முதியோர் கொடுப்பனவு முன்பு போலவே வீட்டிலேயே ஒப்படைக்கப்படும் என்றும் கூறினார்.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு ரூ .10,000 மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய பையை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நோய் பரவுவதை கட்டுப்படுத்திய பின்னரும் நோய் கண்டறியப்பட்டால், நோய் பரவுவதற்கான காரணங்களை தனித்தனியாக விசாரிக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதாகவும் பசில் ராஜபக்ஷ கூறினார்.

இதேவேளை மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவை நவம்பர் 09 திங்கள் அதிகாலை 5.00 மணி வரை நீடிக்க முடிவு செய்யப்பட்டது.

இந்த மாதம் 9 ஆம் திகதி வரை இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள எஹெலிய கோடா பொலிஸ் பிரிவு, குருநாகல் நகராட்சி மன்றப் பகுதி மற்றும் குலியபிட்டியா பொலிஸ் பிரிவு ஆகியவற்றில் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த காலகட்டத்தில் வழக்கம் போல் ஊரடங்கு உத்தரவு வழங்க வேண்டாம் என்றும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டது.

அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, அமைச்சர் டாக்டர் ரமேஷ் பதிரானா, இராஜாங்க அமைச்சர்கள் டாக்டர் சுதர்ஷனி பெர்னாண்டோபுல்லே, டாக்டர் சீதா அரம்பேபோலா, பேராசிரியர் சன்னா ஜெயசுமனா, ஜனாதிபதி ஆலோசகர் லலித் வீரதுங்க ஆகியோரும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## கொரோனா பாதிப்பு....

டுள்ள நிலையில் நாட்டின் மொத்த பாதிப்பு பதினொராயிரத்தைக் கடந்துள்ளது.

இவ்வாறு தொற்று கண்டறியப்பட்டவர்களில் 41 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களில் உள்ளவர்கள் என்பதுடன் ஏனைய 356 பேரும் பேலியகொடை மீன் சந்தை தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன்படி, மினுவாங்கொடை மற்றும் பேலியகொடை கொரோனா கொத்தணியில் தொற்று கண்டறியப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஏழாயிரத்து 582ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 11 ஆயிரத்து 60ஆக அதிகரித்துள்ளது.

மேலும், வைரஸ் தொற்றிலிருந்து இதுவரை நான்காயிரத்து 905 பேர் குணமடைந்துள்ள நிலையில் இன்னும் ஆறாயிரத்து 135 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## கொரோனா....

கள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் 2021ஆம் ஆண்டிலேயே இந்த தடுப்பூசிகள் நாடுகளுக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக உலக சுகாதார மையத்தின் மேம்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் அலுவலர் சஹானி சந்ரரட்ன தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசி கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாகவும், தமது அமைச்சு அவற்றை பெற்றுக்கொள்ள தயாராக இருப்பதாகவும் இலங்கையின் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துரைத்துள்ள உலக சுகாதார அமைப்பின் மேம்படுத்தல் மற்றும் தொலைத்தொடர்புகள் அலுவலர் சஹானி சந்ரரட்ன, தடுப்பூசிகளின் மூன்றாம் கட்ட பரிசோதனைகள் இந்த வருட இறுதியிலேயே ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

## தற்போதைய....

போதைய நிலைக்கு பொறுப்பேற்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

இது அரசாங்கம் உருவாக்கி வைரஸ் இல்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

## கொரோன மரணம்....

படவில்லை. எனினும், நேற்று அவர் உயிரிழந்த பின் நடத்தப்பட்ட இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 21 ஆக அதிகரித்துள்ளதாக எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

## இந்திய அமைச்சர்....

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பக்லேயுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வார நடுப்பகுதியில் நடைபெற்றிருந்தது.

அதாவது, அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் செய்து திரும்பியிருந்த வேளை அவசரமாக இந்தியத் தூதுவரின் இல்லத்தில் இது இடம்பெற்றிருந்தது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மட்டுமே பங்கெடுத்திருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் அவர் தெரிவிக்கையிலேயே மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்தியத் தூதுவரின் அழைப்பில் நான் அவரை நேரில் சந்தித்திருந்தேன். இதன்போது இந்தியப் பிரதமர் மோடியுடனான கூட்டமைப்பின் சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பில் கலந்துரையாடினேன். இந்தியப் பிரதமருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரைந்து கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று அவர் கூறினார்.

எனினும் சமகாலத்தில் காணப்படுகின்ற கொரோனா சூழல்களால் அதற்கான சந்தர்ப்பங்கள் நழுவிச் செல்லும் பட்சத்தில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்படும் கலாசார நிலையத்தைத் திறப்பதற்காக இந்தியப் பிரதமர் வருகின்ற போது நாம் பிரத்தியேகமான சந்திப்பொன்றை மேற்கொள் முடியும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இதனைவிடவும் இந்தியப் பிரதமரின் பயணத்துக்கு முன்னதாக வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் இலங்கைக்கு வருகை தருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கான நிகழ்ச்சி நிரல் தற்போதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான நிலையில் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுதல், வளங்கள் சூறையாடப்படுதல், குடிப்பரம்பலை திட்மிட்டு மாற்றுதல், வரலாற்று இடங்களை கைகப்படுத்தல் போன்ற பல்வேறு நிகழ்வுகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றது.

விசேடமாக புதிய ஆட்சியாளர்களின் காலத்தில் இந்தச் செயற்பாடுகள் வேகமெடுத்திருக்கின்றன. இந்த விடயங்கள் சம்பந்தமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தபோதும் பாரமுகமான நிலைமைகள் நீடிக்கின்றன. ஆகவே இந்தியா இந்த விடயத்தில் கூடிய கரிசனை செலுத்துமாறு கேட்டுக்கொண்டேன்.

அத்துடன் இந்தியாவானது வடக்கு-கிழக்கு மக்களின் பொருளாதார மீட்சிக்கான பல்வேறு முதலீடுக்களைச் செய்வதற்கு பின்னடிப்புக்களைச் செய்யாது உடன் முன்வர வேண்டும் என்றும் நான் கோரினேன். இந்தியா அவ்வாறான முன்முயற்சியொன்றை எடுக்கின்றபோது தமிழ் மக்களின் இருப்பும் இந்தியாவின் நிலைப்பும் உறுதியாகும் என்பதையும் நான் எடுத்துக்கூறியிருந்தேன்.

இந்த விடயங்கள் சம்பந்தமாக இந்தியா அதிகூடிய கரிசனை கொள்வதாகவும் அடுத்துவரும் காலத்தில் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இனப்பிரச்னை தீர்வு தொடர்பாக இந்தியா தமது நிலைப்பாட்டை மாற்றவில்லை என்றும் ஆக்கபூர்வமான வகிபாகத்தைத் தொடர்ந்தும் வழங்குவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் தூதுவர் என்னிடத்தில் கூறினார்.

மேலும் புதிய அரசமைப்பு பணிகள் தொடர்பில் ஆழ்ந்த கரிசனை கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டதோடு இலங்கைத் தீவில் நிலையான சமாதானத்திற்காக இந்தியான தொடர்ந்தும் தமிழ் மக்களுடன் இணைந்து செயற்படும் என்றும் குறிப்பிட்டார் எனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

# மற்றொரு கொத்தணி உருவாகும் வாய்ப்பு

## அரச மருத்துவர்கள் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 02

நாட்டில் மற்றொரு கொத்தணி உருவாகும் அபாயம் உள்ளது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அந்த சங்கத்தின் தலைவர் டாக்டர் ஹரித அளுத்கே இதுபற்றி கூறுகையில், “நாட்டில் தற்போது அடையாளம் காணப்படும் கொரோனா நோயாளர்களின் பெரும்பாலானோர் சமூகத்தில் இருந்தே பதிவாகின்றனர்.

பேலியகொடை மற்றும் மினுவாங்கொடை கொரோனா கொத்தணிகள் தவிர மற்றுமொரு கொத்தணி உருவாகும் அபாயம் காணப்படுறது”, - என்றார்.

## 90 வீதமான....

கப்பட்டுள்ள காலத்தில் நோய் அறிகுறிகள் தென்பட்டால் வைத்திய சாலைக்குச் செல்ல முன்னர் 011 7 966 366 என்ற இலக்கத்திற்கு அழைப்பு விடுத்து அறிவிக்குமாறு சுகாதார பிரிவு அறிவித்துள்ளது.

## கிளிநொச்சியில்....

பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நிலத்தடி நீர் வற்றியுள்ளது.

அப்பகுதியில் வாழும் 450 குடும்பங்களில் 200 குடும்பங்கள் வரை குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளை பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்தக் குடியிருப்பின் டயர் கடைச் சந்தி என கூறப்படும் பகுதியில் 35 அடிக்கு மேல் ஆழம் கொண்ட கிணறுகள் வற்றி வறண்டு காணப்படுகின்றன.

இதனால் குடிதண்ணீர் தேவைக்காக நீண்ட தூரம் செல்ல வேண்டி உள்ளதாகவும், குளிப்பதற்கு அருகில் உள்ள குளத்திற்கு செல்வதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதியில் அமைந்துள்ள குளத்தின் நீரும் வற்றியுள்ளமையால் சேறும் சகதியுமான நிலையில் நீராட வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கும் மக்கள் அப்பகுதியில் முதலைகளின் அச்சுறுத்தலும் காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் பெரும் சிரமங்களை விநாயகபுரம் மக்கள் எதிர் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

வருடம் தோறும் குறித்த பிரச்னைக்கு இக்காலப்பகுதியில் எதிர்கொள்வதாகவும், குறித்த காலப்பகுதியில் தமக்கான குடி குடிதண்ணீர் உள்ளிட்ட தேவைகளிற்காக நீர் விநியோக திட்டம் ஒன்றை ஆரம்பித்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

அதேவேளை குடிதண்ணீருக்காக அப்பகுதியில் பொதுக் கிணறுகளை அமைத்தும், இருக்கின்ற பொதுக்கிணறுகளை ஆழமாக்கியும் கொடுப்பதன் ஊடாக கணிசமான அளவு நீர் தேவையை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது காணப்படும் வறட்சியான நிலை காரணமாக தமது பிரதேசத்தில் குடிதண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது உள்ளதாகவும், கால்நடைகள் உள்ளிட்டவையும் பாதிப்படைந்துள்ளதாகவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றர்.

இவ்வாறான நிலையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், பிரதேச சபையினரும் தமது பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையை அறிந்து விரைவான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் எனவும், தமது பிரச்சினைக்கான நிரந்தர தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
02.11.2020 திங்கட்கிழமை
சார்வாரி, ஐப்பசி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பின் புதிய செயலர்!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் விவகாரத்திற்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை. இந்த நிலையில், தற்போது கூட்டமைப்பிற்கான புதிய செயலராக தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா நியமிக்கப்பட்டிருக்கின்றார். பங்காளிக் கட்சிகளான ரெலோவும், புளொட்டும் இணைந்தே இவ்வாறானதொரு முடிவை எடுத்திருக்கின்றன. ரெலோ, தங்களின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை கூட்டமைப்பின் பேச்சாளராக நியமிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால், தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றுவரையில் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாகவே கூட்டமைப்பு, பேச்சாளர் இல்லாத அமைப்பாக இருக்கின்றது. அவர்களின் தெரிவு சிவஞானம் சிறிதரன். சிறிதரன் போட்டியிலிருந்து விலகிக் கொண்டால் மட்டுமே செல்வத்தினால் பேச்சாளராக வரமுடியும். செல்வம் அடைக்கலநாதனோ அல்லது சித்தார்த்தனோ ஒருபோதுமே கூட்டமைப்பிலிருந்து விலகப் போவதில்லை. இந்தவிடயம் இருக்கும் வரையில், கூட்டமைப்பிற்குள் எப்போதுமே தமிழ் அரசுக் கட்சியின் ஆதிக்கமே இருக்கும்.

மாவை. சேனாதிராசா வடக்கு மாகாண முதலமைச்சர் கதிரையை இலக்கு வைத்திருப்பவர். பாராளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்ததால் அரசியல் ரீதியில் பலவீனமடைந்திருந்த மாவை, ஒருவாறு தன்னைப் பலப்படுத்திக் கொள்வதில் சற்று புத்திசாலித்தனத்துடன் செயற்பட்டு வருகின்றார். அனைவருடனும் ஒற்றுமையை பேணிக்கொள்ளும் ஒரு முகமாக தன்னை காண்பித்துக் கொள்ளும் மாவை. சேனாதிராசா, பங்காளிக் கட்சிகளின் ஆதரவை பெறுவதில் வெற்றி பெற்றிருக்கின்றார். அதேவேளை, விக்னேஸ்வரன் தரப்புடன் ஓர் உறவுநிலையை பேணிக் கொள்கின்றார். ஆனால், தேர்தல் என்று வரும்போது, தமிழ் அரசுக் கட்சி ஒருபோதுமே தனது மேலாதிக்கத்தை விட்டுக் கொடுக்காது. அந்த இடத்தில் பங்காளிக் கட்சிகள் எப்போதுமே இரண்டாம் நிலையில்தான் இருக்கும்.

மாவையை ஓரங்கட்ட வேண்டுமென்னும் நோக்கில்தான் தேசிய பட்டியல் அவசரமாக அம்பாறைக்கு வழங்கப்பட்டது. மாவை மீண்டும் உள்ளுக்குள் வருவதைத் தடுக்கும் நோக்கில்தான் அந்த அவரச முடிவு எடுக்கப்பட்டது. இதற்குப் பின்னால் தமிழ் அரசுக் கட்சிக்குள் நிலவிய உள்முரண்பாடுகளே பிரதான பங்குவகித்தன. ஆனாலும், கட்சிக்குள் தனக்கிருக்கும் ஆதரவை அடிப்படையாகக்கொண்டு ஒருவாறு மாவை தன்னை நிமிர்த்திக்கொண்டார். சுமந்திரன் தொடர்பில் அதிருப்தியடைந்திருந்த பங்காளிக் கட்சிகள் மாவையை முன்னிறுத்தி தங்களது சுமந்திரன் மீதானஅதிருப்தியைக் காண்பித்துக் கொண்டன. தற்போது, மாவையை கூட்டமைப்பின் செயலராக பங்காளிக் கட்சிகள் ஏற்றுக் கொண்டிருப்பதும் இந்த பின்னணியில்தான்.

ஆனால், இதன்மூலம் மேலும் பங்காளிக் கட்சிகள் பலவீனமடையுமா? ஏனெனில், கூட்டமைப்பின் தலைவராக தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்த சம்பந்தன் இருக்கின்ற நிலையில், செயலராக தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் நியமிக்கப்பட்டிருக்கின்றார். உண்மையில், பங்காளிக் கட்சிகளைச் சேர்ந்த ஒருவர் இந்தப் பொறுப்பை எடுத்திருக்கலாம். இதில் தமிழ் அரசுக் கட்சியில் மட்டும் குற்றம் காணமுடியாது. பங்காளிக் கட்சிகள் செயலர் பொறுப்பைத் தங்களிடம் தருமாறு கேட்டிருக்கலாம். பேச்சாளர் விடயத்தை முடித்துவிட்டு செயலர் பதவி தொடர்பில் முடிவெடுக்கும்படி கூறியிருக்கலாம். ஆனால், வழமைபோல் பங்காளிக் கட்சிகள் இந்த விடயத்திலும் அரசியல் கொடைவள்ளல்களாகவே நடந்து கொண்டிருக்கின்றன. பங்காளிக் கட்சிகளின் தலைவர்களைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு தங்களிடம் ஆளுமையிருக்கின்றதா என்பதில் அவர்களுக்கே சந்தேகமுண்டு போலும். இந்த அடிப்படையில்தான், பொறுப்புக்களை எடுப்பதில் எப்போதுமே துணிகரமான முடிவுகள் எடுக்க அவை தயங்குகின்றன.



# மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் கண்டனம்!

- அலசுவது இராஜதந்திரி -

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு விழா கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் இடம்பெற்றபோது அவ்வைபவத் துக்கு பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு கௌர விக்கப்பட்டமை குறித்து அமெரிக்காவின் நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக்கட்டத்தின்போது 2009ஆம் ஆண்டு ஏராளமான உயிரிழப்புகள், சரணடைந்தோர் காணாமலாக்கப்பட்டமை மற்றும் மக்களது காணிகள் வடக்கு - கிழக்கில் அபகரிக்கப்பட்டமை போன்ற நடவடிக்கைகளாக, பாரிய அளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றபோது ஜனாதிபதியாக இருந்தவரே இன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

எனவே, இத்தகைய ஒருவர் உலகில் சமாதானம், சகவாழ்வு போன்றவற்றின் சின்னமாக விளங்கும் ஐ.நா ஸ்தாபனத்தினால் எவ்வாறு அதன் ஆண்டு விழா வைபவத்துக்கு பிரதம விருந்தினராக அழைக்கப்படடிருந்தார் என்று கேள்வியை எழுப்பியே மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

### 75ஆவது ஆண்டு விழா

கடந்த 23ஆம் திகதி கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகத்தில் ஐ.நா ஸ்தாபனத்தின் 75ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டிருந்தது. அவ்வைபவத்தில் உரையாற்றிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இலங்கையில் ஐ.நாவின் பணிகளுக்கு தமது அரசாங்கம் முழுமையான ஆதரவை வழங்குமெனக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், உலகில் எந்த மூலையிலும் மனித உரிமைகள் மீறப்படுவதை அவதானிப்பதுடன் அவற்றுக்கு எதிராக குரல் கொடுத்துவரும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம், ஐ. நா. விழாவுக்கு பிரதமர் ராஜபக்ஷ அழைக்கப்பட்டமை தவறு எனச் சுட்டிக்காட்டியிருப்பதோடு, மஹிந்த ஜனாதிபதியாகவும் அவரது சகோதரர் கோட்டாபய ராஜபக்ஷ அன்று பாதுகாப்புச்செயலாளராகவுமிருந்தே மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளது.

மிகவும் தெளிவான முறையில், எத்தகைய ஒளிவு மறைவுமின்றி மனித உரிமைகள் கண்காணிப்பகம் தனது கண்டனத்தை வெளியிட்டிருப்பது வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஓரளவு ஆறுதலைத்தருவதாகவே இருக்கின்றது.

ஜெனீவாவில் கொண்டுவரப்பட்ட பிரேரணையில், யுத்த குற்றவாளிகள் சர்வதேச நீதி விசாரணைகளுக்கு உட்படுத்தப்படவேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளதுடன், கடந்த கால மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தெளிவான கண்டனம்

மனித உரிமைகள் கண்காணிப்பகம் யுத்தம் இடம்பெற்றபோது மட்டுமல்ல, யுத்தத்துக்குப் பின்னரும் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் ஊடகவியலாளர்கள் கடத்தப்பட்டமை, இன்றுவரை அவர்களில் சிலர் காணாமலாக்கப்பட்டமை என்பவை பற்றியும் தனது மஹிந்த ராஜபக்ஷ குறித்த கண்டனத்தில் தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரை காலமும் யுத்தத்தினால் நேரடியாக பாதிக்கப்பட்டோரை அங்கத்துவப்படுத்தும் அமைப்புகள் மற்றும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அரசியல் கட்சிகளே கண்டனங்களை இடையறாது வெளியிட்டு வருபவையாக இருக்கின்றன. ஆனால், தனது சுயமான அவதானிப்பு மூலமாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஐ.நா. கொழும்பு அலுவலகம் ஐ. நாவின் 75ஆவது ஆண்டு விழாவில் பிரதம விருந்தின ராக கலந்து கொள்ள அழைப்பு விடுத்ததை கண்டித்துள்ளதை அவதானிக்கும்போது, சர்வதேச சமூகம் இலங்கையின் வடக்கு -கிழக்கின் யுத்த பாதிப்புகள்குறித்த தனது நிலைப்பாடுகளில்தொடர்ந்து உறுதியாக இருக்கின்றதென்பதையே அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

### இராணுவ மயமாக்கல்

மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தனது கண்டனத்தில், ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட, இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்தி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்கும் கோரிக்கைகள் அடங்கிய பிரேரணை எவ்வாறு தட்டிக்கழிக்கப்பட்டுள்ளதென்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதவிர, இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டை எவ்வாறு ஓர் இராணுவ மயப்படுத்தப்பட்ட நிலைக்கு விரைந்து கொண்டு செல்லுகின்றனர் என்பதையும் தெரிவித்திருப்பதுடன், முக்கிய சிவில் நிர்வாகப் பொறுப்புகளில் இராணுவப் பின்னணியைக் கொண்டோர் நியமிக்கப்பட்டுள்ளதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

எனவே, மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இக் கண்டன அறிக்கை, 'நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்பது போல, உலகின் முன்னணி நிறுவனமாக ஐ. நா இருக்கலாம் ஆனால், யுத்த குற்றங்களோடு சம்பந்தப்படுத்தப்பட்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஒரு முக்கியமான ஐ. நா நிகழ்வுக்கு கொழும்பில் பிரதம விருந்தினராக அழைத்தமை பெருந்தவறென்று சுயமாகவே தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளமை, சர்வதேச சமூகம் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் மனிதாபிமான பிரச்னைகள் குறித்து மிக விளிப்புடனிருப்பதையே அறியமுடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள்

# முல்லைத்தீவில் 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

முல்லைத்தீவு, நவ. 02

முல்லைத்தீவில் இரண்டு கொரோனா தொற்றாளிகள் இனங்காணப்பட்டதை அடுத்து, 15 பேர் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர் என்று முல் லைத்தீவுமாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பா ளர் த.காண்டீபன் தெரிவித்துள் ளார்.

நேற்று அவர் தனது பணி மனையில் நடத்திய ஊடக சந்திப் பிலேயே இதனைத் தெரிவித் தார்.

“முல்லைத்தீவு மாவட்டத் தில் முதன்முதலாக கொரோனா நோயாளிகள் இருவர் வெள்ளிக் கிழமை இனங்காணப்பட்டனர். அவர்கள் கொரோனா கொத்தணி களுடன் தொடர்புடையவர்கள் என்ற அடிப்படையில் முன் னரே தனிமைப்படுத்தப்பட்டி ருந்தனர்.

தொற்றாளர்கள் இனங்காணப் பட்டதை அடுத்து அவர்களு டன் மிகவும் நெருங்கிய தொடர்புபட்டவர்கள் என்ற அடிப்படையில் இதுவரை 15பேரைத் தனிமைப் படுத்தி யுள்ளோம். குறிப்பாக இவ் வாறு கொரோனா தொற்றா ளர்கள் இனங்காணப்படும் போது, தொற்றாளர்களுடன் தொடர்புடைய பிரதேசத் தையோ, அல்லது கிராம அலுவலர் பிரிவையோ முற்றாக முடக்குவது வழமை. ஆனால் எமது மாவட்டத்தில் அத்த கைய இறுக்கமான செயற்பாட் டினைச் செய்யவில்லை.

ஏனெனில் இனங்காணப் பட்ட தொற்றாளர்கள் இரு வரையும், நாம் ஏற்கனவே பத்து நாட்களுக்கு முன்பாகவே, அவர்களுக்கு தொற்று இருக் கலாம் என்ற அடிப்படையில் சுயதனிமைப்படுத்தலில் ஒரு வரையும், மற்றவரை சமாசத் திலும் தனிமைப்படுத்தி வைத் திருந்தோம். ஆகவே இவர்களி டமிருந்து ஏனையோருக்கு தொற்று பரவியிருக்கக்கூடிய வாய்ப்புக் குறைவாக உள்ளது” என்றார். (ஐ)

# ஒரே நாளில் அதிகமானோர் தொற்றிலிருந்து குணமடைவு

கொழும்பு, நவ. 02

**நேற்று மட்டும் கொரோனா தொற்றிலிருந்து 506 பேர் குணமடைந்தனர். ஒரே நாளில் இவ்வளவு எண்ணிக்கையானோர் குணமடைந்த சம்பவம் இதுவே முதல் தடவையாகும்.**

**இதேவேளை, குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 4,905 ஆக அதிக ரித்துள்ளது. 7 வெளிநாட்டினர் உட்பட 5,738 பேர் தற்போது நாடு முழுவதும் 45 வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

அம்பந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து 113 பேர், கம்புருகமுவ வைத்தியசாலையில் இருந்து 88 பேர், வெலிக்கந்த ஆதார வைத் தியசாலையில் இருந்து 52 பேர், ஹோமாகம ஆதார வைத்திய சாலையில் இருந்து 50 பேர், நெவில் பெர்னாண்டோ வைத் தியசாலையில் இருந்து இருந்து 45 பேர் தொற்றிலிருந்து மீண் டனர்.

இதேபோன்று, இரணவில சிகிச்சை மையத்தில் இருந்து 40 பேர், லுனாவ மற்றும் கொழும்பு கிழக்கு தள வைத்தியசாலை யிலிருந்து 30 பேர், ஐ.டி.எச் இலிருந்து 20 பேர், இங்கிரிய மாவட்ட வைத்தியாலையில் இருந்தும் 19 பேர், கொஸ்கம வைத்தியசாலையில் இருந்து 11 பேர், ரம்புக்கன வைத்தியசாலை யிலிருந்து 4 பேர், மினுவாங் கொட மற்றும் அம்பன்பொல வைத்தியசாலைகளிலிருந்து தலா 2 பேர், குணமடைந்து வெளியேற்றினர். (ஐ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, நவ. 02

மாங்குளம் நகர்ப்பகுதியில் கஞ்சாவுடன் கைதானவரை விளக்க மறியலில் வைக்க முல் லைத்தீவு நீதிவான் உத்தரவிட் டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை முல்லைத்தீவு - மாங்குளம் நகர் பகுதியில் சந்தேகத்துக்கு இடமான நபர் ஒருவரை மாங் குளம் பொலிஸார் சோதனை செய்தனர். அப்போது அவரி டமிருந்து 800 கிராம் கேரளா கஞ்சா, ஒரு தொகை பணம் என்பன காணப்பட்டன.

இதையடுத்து அவரைக் கைது செய்த பொலிஸார், நேற் றைய தினம் ல்லைத்தீவு மாவட்ட பதில் நீதவான் வாசஸ்தலத்தில் முன்னிலைப்படுத்தினர்.

நீதிவான் அவரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டார். (ஐ)

# யானைகளால் 52 பேர் உயிரிழப்பு மனிதரால் 300 யானைகள் கொலை

கொழும்பு, நவ. 02

இந்த வருடத்தின் முதல் பத்து மாதங்களில் காட்டு யானைகள் தாக்கி 52 பேர் உயிரிழந்தனர். இதேவேளை மனிதர்களால் 300 இற்கும் மேற்பட்ட யாகைள் கொல்லப்பட்டுள்ளன என்று வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதே நேரம் பல்வேறு காரணிகளினால் 372 யானைகள் இது வரையில் உயிரிழந்தன என்று அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது

நாட்டில் மாதம் ஒன்றுக்கு 700 காட்டு யானைகள் பிறப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இவற்றில் 150க்கும் அதிகமான காட்டு யானைகள் குறிப்பிட்ட வயதுக்கு முன்னரே பல்வேறு காரணிகளால் உயிரிழக்கின்றன.

மேலும், 300க்கும் அதிகமான யானைகள் மனிதரின் துப்பாக்கிச் சூட்டிலும் வலைகளிலும் சிக்கி உயிரிழக்கின்றன. இந்தநிலையில், நாட்டில் இறுதியாக மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின் படி 6 லட்சத்து 100 காட்டு யானைகள் இருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# இந்திய பாதுகாப்புக்கு குந்தகம் நேர்ந்தால் ஈழத் தமிழர் ஏற்காராம்

## இப்படி சொல்கிறார சுரேஷ்



யாழ்ப்பாணம், நவ. 02

‘இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய எந்தச் செயல்பாடுகளையும் ஈழத்தமிழர்களால் ஏற்றுக்கொள்ள முடியாது”, என முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறே மச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர் பில் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்து பசுபிக் பிராந்தியத் தில் தனது இராணுவ மேலாதிக் கத்தை நிலைநிறுத்திக் கொள்ள சீனா எடுத்திருக்கும் முயற்சிக ளும், சீனாவின் மையப்புள்ளி யாக ஓர் முக்கியமான இடத்தில் இலங்கை இருப்பதால், இலங் கையைப் பயன்படுத்த சீனா எடுக்கும் முயற்சிகள் தொடர் பில் அமெரிக்கா, இந்தியா போன்ற நாடு கள் கவலை கொண்டிருக்கின்றன. இது வெவ்வேறு பிரச்னைகளுக்கும் வழிவகுக்கும் என அந்நாடுகள் கருதுகின்றன.

வடக்கு - கிழக்கு என்பது இந்தியாவுக்கு அண்மையிலுள்ள பிரதேசம் என்பதும், இதற்குள் சீனா வெவ்வேறு பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றைக் காட்டி வருவதென்பது இந்தி யாவுக்கு மேலும் பாதிப்பைத் தான் உருவாக்கும். இதனை இலங்கை அரசாங்கம் ஏற்படுத் தக் கூடாது. தமிழ் அரசியல் கட்சிகள் இது தொடர்பில் மிகத் தெளிவான சிந்தனைக்கு வரவேண்டும்-என்றார். (எ)

# தொற்றாளருடன் தொடர்புடையோர் தென்மராட்சியில் தனிமைப்படுத்தல்

சாவகச்சேரி, நவ. 02

நல்லூர் பகுதியில் கொரோனா தொற்றுக்குள்ளானவருடன் தொடர்பை பேணியவர்கள், சுகாதாரப் பிரிவினரால் தொடர்ச்சியாக சுய தனிமைப் படுத்தப்பட்டு வருகின்றார்கள்.

அந்த வகையில் குறித்த நப ரிடம் தொடர்பைப் பேணினர் என்ற சந்தேகத்தின் அடிப்படை யில் மறவன்புலவு மற்றும் கைதடி - நாவற்குழி தெற்கு பகுதிகளில் இரண்டு குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொழும்பிலிருந்து வருகை தந்த நிலையில் கொரானா வைரஸ் தோற்று உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தகரின், வர்த்தக நிலையத் தில் பணிபுரியும்

பணியாளர்களின் குடும்பங் களில் நேற்றைய தினம் சுயதனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச சுகா தார உத்தியோகத்தர்கள் குறித்த வீடுகளில் தனிமைப்படுத்தப் பட்டதற்கான அறிவுறுத்தல் ஸ்ரிக்கர்கள் நேற்று ஒட்டப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் பொலிஸாரால் மீட்பு

வவுனியா, நவ. 02

வவுனியா பொன்னாவரசங் குளத்தில் புதைக்கப்பட்ட துப் பாக்கி மற்றும் கைக்குண்டுகளை பொலிஸார் நேற்று மீட்டனர்.

அந்தப் பகுதியில் ஆயுதங் கள் புதைக்கப்பட்டுள்ளன என்று தேசிய புலனாய்வு பிரி விற்கு தகவல் கிடைத்தது. இதன் பிரகாரம் நீதிமன்ற அனு மதியுடன் அப்பகுதிக்கு சென்ற வவுனியா பொலிஸார் மணல் அகழ பயன்படும் இயந்திரம் மூலம் நிலத்தை தோண்டி தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது மண்ணில் புதைக்கப்பட்டிருந் ரி -56 ரக துப்பாக்கி, அதற்கான மகசின் கள் இரண்டு, 6 கைக்குண்டுகள் என்பவற்றை பொலிஸார் மீட் கப்பட்டன.

மீட்கப்பட்ட கைக்குண்டு கள் விசேட அதிரடிபடையின ரால் செயலிழக்க செய்யப் பட்டன. எனினும் துப்பாக்கி பயன்படுத்த முடியாத நிலை யில் காணப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது. (ஐ)

# சுகாதார ஆய்வக சேவைகள் பணிப்பாளர் பணிநீக்கம்

கொழும்பு, நவ. 02



சுகாதார அமைச்சின் துணை இயக்குநர் நாயகம் (ஆய்வக சேவைகள்) மருத்துவர் ஆனந்த ஜெயலால் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆனந்த ஜெயலாலுக்கு பதிலாக துணை இயக்குநர் நாயகமாக பணியாற்றிய (ஆராய்ச்சி மற்றும் பயிற்சி) மருத்துவர் ஆர்.எம்.எஸ்.கே. ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக, இலங்கை அரசு மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஓர் ஆவணத்தை எழுத்துபூர்வமாக வழங்கியது. அதில் ஜெயலால் நீக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியிருந்தனர்.

நாட்டில் கொவிட் -19 தொற்றுநோயை அடுத்து ஆய்வக சேவைகள் சரிவை சந்தித்தத்கு ஆனந்த ஜெயலால் காரணம் என்று அந்த சங்கம் குற்றம்சாட்டுகிறது.

# யாழ்ப்பாணத்தில் கடல்நீர் புகுந்த சம்பவங்கள் தொடர்பில் ஆய்வு

## அரச அதிபர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்ப்பாணத்தில் கடல் நீர் உட்புகுந்தமை தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்படுவதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரி வித்துள்ளார்.

கடல்நீர் ஊருக்குள் உட்புகுந்த சம்பவங்கள் தொடர்பில் வின விய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தில் கல்லுண் டாய், ஊர்காவற்துறை, குரு நகர், நாவாந்துறை பிரதேசத் தில் இவ்வாறு கடல் நீர் உட் புகுந்தமை தொடர்பில் மாவட்ட செயலகத்திற்கு தகவல் கிடைத் துள்ளது. எனினும் இதற்கான காரணம் இன்னும் கண்டறி யப்படவில்லை எனவும் அது தொடர்பில் அனர்த்த முகா மைத்துவத்திற்கு தெரியப்படுத் தியுள்ளதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார். (ஐ)

செய்திகள்

# ட்ரம்பின் தனிப்பட்ட கைபேசி இலக்கத்தை கோட்டாபயவிடம் வழங்கிய பொம்பியோ!

## இருவரும் மூடிய அறைக்குள் பேசினர்

கொழும்பு, நவ 02

**அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, இலங்கைக்கான தனது பயணத்தின் போது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்தவேளை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தனிப்பட்ட முக்கிய செய்தியை கோட்டாபயவிடம் தெரிவித்துள்ளார் எனத் தெரியவந்துள்ளது.**



அமெரிக்க - இலங்கைப் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது மைக் பொம்பியோ தான் இலங்கை ஜனாதிபதியுடன் சில நிமிடங்கள் மூடிய அறைக்குள் பேச்சுகளை நடத்த விரும்பினார்.

இந்தச் சந்திப்பில் அமெரிக்க ஜனாதிபதியின் தனிப்பட்ட செய்தியை மைக் பொம்பியோ கோட்டாபயவிடம் பகிர்ந்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் சிறிய நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்தும் விதத்தில் தனது வெளிவிவகாரக் கொள்கைகளில் மாற்றங்களை மேற்கொள்கிறது என மைக் பொம்பியோ, கோட்டாபயவிடம் கூறினார்.

அமெரிக்கா பெரிய நாடுகளில் இருந்து தனது கவனத்தை சிறிய நாடுகளை நோக்கித் திருப்பியுள்ளது எனவும் மைக் பொம்பியோ கூறியுள்ளார்.

இலங்கையுடன் நெருக்கமாக இணைந்து செயலாற்றுவது குறித்து அமெரிக்கா ஆர்வமாகவுள்ளது எனத் தெரிவித்துள்ள மைக் பொம்பியோ, இலங்கையில் அமெரிக்க நிறுவனங்களை முதலீடு செய்யுமாறு கேட்டுக்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏதாவது விசேட தொழில்துறைக்கு அமெரிக்காவின் உதவி தேவைப்படுகின்றதா என மைக் பொம்பியோ கோட்டாபயவிடம் கேட்டுள்ளார்.

நாட்டின் விவசாயத்துறையை அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளன என்று கோட்டாபய தெரிவித்துள்ளார்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மாநிலமான கன்சாஸ் மூலம் அரசியலில் நுழைந்த தனக்கு நாட்டுக்கு பேண்தகு விவசாயத் தொழில்துறையின் முக்கியத்துவம் தெரியும் என்று மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார்.

இராணுவப் பின்னணியைக் கொண்ட மைக் பொம்பியோ, கோட்டாபயவின் இராணுவ அனுபவங்கள் குறித்து கேட்டறிந்துள்ளார். கோட்டாபய தனது வாழ்நாளில் அமெரிக்காவில் இராணுவப் பயிற்சி எதையாவது பின்பற்றியிருக்கின்றாரா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கோட்டாபயதான் அமெரிக்காவின் போர்ட் பெனிங் இராணுவப் பயிற்சிச் கல்லூரிக்குச் சென்றார் எனத் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட போர்ட் பெனிங் கல்லூரிக்கு மைக் பொம்பியோவும் சென்றுள்ளார்.

பொதுவான விருப்பங்கள் காரணமாக நட்புறவை மேலும் வளர்த்துக்கொண்ட மைக் பொம்பியோ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொடர்ந்தும் தொடர்பில் இருப்பதாகத் தெரிவித்துள்ளதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான அபிவிருத்தி ஒத்துழைப்பு குறித்து மேலும் பேச்சில் ஈடுபடுவதாகத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ தனது தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்தையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இந்தச் சந்திப்பின்போது வழங்கியுள்ளார்.

# மேல் மாகாணம் தொடர் முடக்கம்

## 9ஆம் திகதி வரை ஊரடங்கு நீடிக்கும்

கொழும்பு, நவ.02

மேல் மாகாணத்தில் அமுலில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீங்கப்படாது. எதிர்வரும் 9ஆம் திகதி காலை 5 மணிவரை ஊரடங்கு உத்தரவு தொடரும் என கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதி பதி செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்துடன், அநாவசியமாக பொது வெளியில் நடமாடு வதை மக்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண் டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

கொழும்பு, கம்பஹா, களுத் துறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத் தில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணி முதல் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று திங்கட்கிழமை அதிகாலை 5 மணிக்கு நீக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாத் தொற்றாளரைக் கண்காணித்த சுகாதார வைத்திய அதிகாரி திடீர் உயிரிழப்பு

மட்டக்களப்பு, நவ 02

களுவாஞ்சிக்குடி மற்றும் வெல்லாவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் சீனித்தம்பி கிருஷ்ணகுமார் நேற்றுக் அதிகாலை திடீரென உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று முன் தினம் கூட களுவாஞ்சிக்குடிப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவரைக் கண்காணித்துவிட்டே வந்திருக்கின்றார்.

இவரின் மாதிரி பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த இவர், 3 பிள்ளைகளின் தந்தையாவார். மகனொருவர் மருத்துவபீட மாணவராவார்.

கல்முனைப் பிராந்திய தமிழ், முஸ்லிம் மக்களின் மனங்களில் நீங்கா இடம்பிடித்த மருத்துவர் கிருஷ்ணகுமார் தனது 60ஆவது வயதில் காலமாகியுள்ளார்.

இவர் களுவாஞ்சிக்குடி மற்றும் வெல்லாவெளிப் பிரிவில் பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரியாக இருந்து போரைதீவுப்பற்று பிரதேசத்திலுள்ள கிராமங்களில்



கொரோனாத் தொற்றைத் தடுப்பதில் மிகவும் காத்திரமாகப் பணிபுரிந்து மக்களால் நேசிக்கப்பட்ட வைத்தியராவார்.

மக்கள் நேசித்த மனித நேயம் கொண்ட சிறந்த மனிதரான இவரது திடீர் இழப்பு மக்களுக்குப் பேரிழப்பாகும்.

# பொறுப்புணர்வில்லாத கோட்டாபயவின் அரசு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 02

அரசு கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த தவறிவிட்டது என ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று நடந்த செய்தியாளர் மாநாட்டில் அக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண் டார தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவும் நிலையில் அரசு பொறுப்புணர்வில்லாமல் நடந்துகொள்கின்றது. தேர்தலிற்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் காணப்பட்ட இரக்க உணர்ச்சியை தற்போது காணமுடியவில்லை.

அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தங்களுக்கு வாக்களித்த மக்களைப் புறக்கணிக்கின்றனர். கொவிட் 19 நிதியத்திற்கு உலக வங்கி வழங்கிய நிதி தொடர்பான ஆவணங்கள் எவையும் இல்லை. அரசிடம் தற்போது உரிய திட்டங்கள் எதுவுமில்லை. - என்றார்.

# கார்த்திகை மாத மரநடுகை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ 02



கார்த்திகை மரநடுகை வேலைத்திட்டம் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தினால் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சிறுப்பிட்டி பார்வதி பரமேஸ்வரர் ஆலயத்தின் முன்பாக புன்னை மரத்தை நட்டு வைத்து கார்த்திகை மாதம் மரநடுகையை இயக்கத்தின் செயலாளர் பொ.ஐங்கரநேசன் ஆரம்பித்து வைத்தார்.

இம்முறை வீடுவீடாகச் சென்று மரங்களை வழங்க உள்ளதாகவும் சரியான முறையில் வளர்க்கப்படுகின்றனவா என்பது தொடர்பிலும் அவ்வாறு சரியான முறையில் பராமரித்து வளர்த்து விடுபவர்களை கௌரவிக்கும் நிகழ்வும் நடுகை மாதத்தின் இறுதியில் இடம்பெறும் என்றும், இதன் போது தமிழ் தேசிய பசுமை பசுமை இயக்கத்தின் செயலாளர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் குறிப்பிட்டார்.

# கொரோனா தொற்றிலிருந்து விடுபட இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடு

## பிரதமர் மஹிந்தவின் வழிகாட்டலில்

கொழும்பு, நவ 02

கோவிட்-19 நோய்த் தொற்றிலிருந்து நாடும் நாட்டு மக்களும் விடுபட வேண்டி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நாடு முழுவதும் இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் பிரதமரின் ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

பிரதமரின் வழிகாட்டுதலின் கீழ் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், நாட்டில் வாழுகின்ற மக்கள் அனைவரும், கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக, அருளாசி வேண்டி நாடு முழுவதிலும் உள்ள இந்து ஆலயங்களில் சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலயங்களில் மஹாம்ருத்யுஞ்ஜய ஹோமம் மற்றும் சிறப்பு பிரார்த்தனை வழிபாடுகளைச் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் இடம்பெறும் இந்த சிறப்புப் பிரார்த்தனை வழிபாடுகளைத் தினமும் காலை 6.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் 'ஆலய தரிசனம்' நிகழ்ச்சியில் ஒலிபரப்புச் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.- என்றுள்ளது.

செய்திகள்

## இங்கிரிய ஆடைத்தொழில்சாலை ஊழியர்கள் 21 பேருக்கு தொற்று

கொழும்பு,நவ.02

இங்கிரிய பகுதியிலுள்ள முன்னணி ஆடைத் தொழில்சாலையில் 21 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இந்தத் தொழில்சாலையில் ஊழியர் ஒருவர் கடந்த வாரம் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டது. இதன் பின்னர் ஏனைய 140 ஊழியர்களிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவிலேயே மேலும் பேர் கொரோனா தொற்றுக்குள்ளானமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் கொரோனா தொற்றுக்குள்ளான இந்த ஊழியர்கள் நம்புக்கனையிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அதுமாத்திரமன்றி கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுடன் தொடர்புகளைப் பேணிய நபர்களிடமும் பி.சி.ஆர். சோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ)

## கொரோனா தொற்றாளர்களுக்காக 143 அவசர சிகிச்சை கட்டில்கள்

### வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தகவல்

கொழும்பு,நவ.02

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்க நாடு தழுவிய ரீதியில் வைத்தியசாலைகளில் 143 அவசர சிகிச்சை கட்டில்கள் தயார்படுத்தப்பட்டுள்ளன என பிரதிச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விஷேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஒதுக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சை கட்டில்களில் மூன்று மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

கொரோனா தொற்று அவதான நிலைமையை அடைந்தால் அவசர சிகிச்சை கட்டில்கள் பாவனை அதிகரிக்கும். நோயாளர்கள் சடுதியாக அதிகரித்தால் இந்தக் கட்டில்களின் தேவையும் அதிகரிக்கும். ஐ.டி.எச். உள்ளிட்ட எந்தவொரு வைத்தியசாலையிலும் இந்த அவசர சிகிச்சை கட்டில்கள் இன்னும் நிரம்பவில்லை. தற்போதைய நிலவரப்படி 3 அவசர சிகிச்சை கட்டில்கள் மாத்திரமே பயன்படுத்தப்படுகின்றன. அந்த வைத்தியசாலையில் மட்டும் 10 அவசர சிகிச்சை கட்டில்கள் உள்ளன - என்றார். (எ)

## மறு அறிவித்தல் வரை மெனிங் சந்தை மூடல்

கொழும்பு,நவ.02

நாட்டில் கொரோனா நோய்த் தொற்று தீவிரமடைந்துள்ளதால் கொழும்பு - புறக்கோட்டை மெனிங் சந்தையை மறு அறிவித்தல் வரை மூடத் தீர்மானித்துள்ளது என மெனிங் சந்தை வியாபாரிகள்சங்கம்தெரிவித்துள்ளது.

மேல் மாகாணத்தில் அமுலிலுள்ள ஊரடங்குச்சட்டத்தை எதிர்வரும் 9ஆம் திகதி அதிகாலை 5 மணிவரை நீடிக்க நேற்று அரசு தீர்மானித்துள்ளது. இதனையடுத்து இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### ஜனாதிபதியிடம் இரக்க உணர்வில்லை

# கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கம் தவறிவிட்டது



கொழும்பு,நவ.02

**தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் காணப்பட்ட இரக்க உணர்வை தற்போது காணமுடியவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி கவலை வெளியிட்டுள்ளது. இதேவேளை அரசாங்கம் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்றும் ஐக்கிய மக்கள் சக்தி குற்றம்சாட்டியுள்ளது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இவ்வாறு குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் பரவுகின்ற நிலையில் அரசாங்கம் பொறுப்புணர்வில்லாமல் நடந்துகொள்கின்றது.

தேர்தலுக்கு முன்னர் கோட்டாபய ராஜபக்ஷவிடம் காணப்பட்ட இரக்க உணர்வை தற்போது காணமுடியவில்லை.

அமைச்சர்களும், பிரதியமைச்சர்களும் தங்களுக்கு வாக்களித்த மக்களைப் புறக்கணிக்கின்றனர்.

கொவிட்-19 நிதியத்துக்கு உலக வங்கி வழங்கிய நிதி தொடர்பில் ஆவணங்கள் எவையும் இல்லை. இதேவேளை, கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கத்திடம் தற்போது உரிய திட்டங்கள் எதுவுமில்லை. அரசு தனது கடமையை சரிவர நிறைவேற்றத் தவறிவிட்டது-என்றார். (எ)

## குடிவரவுத் திணைக்களம் இன்று முதல் மூடப்படும்

கொழும்பு, நவ 02

இலங்கையின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் மறு அறிவித்தல் வரை மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று திங்கட்கிழமை முதல் சேவைகள் நிறுத்தப்படுவதாக குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைத் தடுக்கும் நடவடிக்கையாகவே இவ்வாறு பத்தரமுல்லை பிரதான அலுவலகத்துக்கு பொதுமக்கள் வருகை தருவது தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

## பல்பொருள் அங்காடி ஊழியர்கள் இருவருக்கு கொரோனா தொற்று

கொழும்பு,நவ.02

சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தின் கொட்டாவ கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் இருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தால் வெளியிடப்பட்டிருக்கும் பொது அறிவித்தலில் தெரிவித்துள்ளவை வருமாறு:

கொட்டாவ பகுதியிலுள்ள எமது நிறுவனக் கிளையில் பணியாற்றும் இரு ஊழியர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றிலிருந்து ஊழியர்களைப் பாதுகாக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மூலமே இவ்வாறு தொற்று ஏற்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிய அனைத்து ஊழியர்களுக்கும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதுடன் 14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளனர்.

அத்தோடு வாகனத்தரிப்பிடம், உணவறை உள்ளடங்கலாக கொட்டாவ சொப்ட்லொஜிக் க்ளோமார்க் நிறுவனத்தின் அனைத்துப் பகுதிகளையும் தொற்று நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள கொரோனா வைரஸ் பரவல் தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தையும் முறையாகப் பின்பற்றுவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம்.

எப்போதும் எமது நிறுவனப் பங்காளர்கள், ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பாதுகாப்புக்கு நாம் முன்னுரிமை வழங்குகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் தொழில்சாலைகள், பொதுச் சந்தைகள் உள்ளிட்ட இடங்களில் கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். (எ)

### அபிவிருத்தி திட்டங்கள் அமுல்:

# பொருளாதாரத்தை முன்புபோன்று வளர்ச்சி பெறச் செய்ய முடியும்

கொழும்பு,நவ.02

தொழில் முயற்சியாளர்களை மீண்டும் மேம்படுத்தி தனியார் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்குவதன் மூலம் நாட்டில் மீண்டும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் என இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.



இத்தகைய முயற்சிகள் 2015ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த ஆறரை சதவீத பொருளாதார வளர்ச்சி நோக்கி நாட்டை இட்டுச் செல்ல வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் பாதியில் பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டிருந்தது. ஆனால் அது வளர்ச்சிப் பாதைக்குத் திரும்பியுள்ளது. தெளிவான தொலைநோக்குடன் கூடிய புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை கட்டமைப்பு பொருளாதாரத்தின் செயல்திறனை மேம்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய கைத்தொழில், பெற்றோலியத் துறைகள் சார்ந்த ஏற்றுமதி வாய்ப்புக்களை மேம்படுத்தவும் அதன் மூலம் துறைமுக நகர், அம்பாந்தோட்டைத் துறைமுகத் தொழில் வலயம் முதலான திட்டங்கள் மூலம் போதிய வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதங்களுக்கான இறக்குமதி செலவீனத்தில் 300 கோடி டொலரை சேமிக்க முடிந்துள்ளது. இதன்மூலம் ஏற்றுமதிக்கும், தொழில் படைக்கும் அனுகூலங்கள் கிடைத்துள்ளன.

ரூபாவின் பெறுமதி ஸ்திரமான மட்டத்துக்குள் வந்துள்ளது. அந்நியச் செலாவணி சந்தையில் 300 மில்லியன் டொலரைக் கொள்வனவு செய்ய இலங்கை மத்திய வங்கிக்கு முடிந்துள்ளது. இதனால் ஒக்ரோபர் மாதத்தில் சர்வதேச பிணை முறிகளுக்கு 100 மில்லியன் டொலரைத் திருப்பிச் செலுத்துதல் அடங்கலாக 400 பில்லியன் ரூபா கடனைத் திரும்பிச் செலுத்த முடிந்துள்ளது.

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 700 மில்லியன் டொலரைப் பெறுவது பற்றிப் பேச்சு நடத்தப்படுகின்றது-என்றார். (எ)

## கொரோனா அறிகுறி தென்பட்டால் அறிவிக்க தொலைபேசி இலக்கம்


கொழும்பு,நவ.02

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்று அச்சுறுத்தலால் பொதுமக்கள் நலன் கருதி விஷேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கொரோனா தொற்று தொடர்பில் ஏதேனும் அறிகுறிகள் தென்படுமாயின், வைத்தியசாலைக்குச் செல்ல முன்னர் அழைப்பை ஏற்படுத்தித் தகவலை வழங்குமாறு, கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதாவது, ஊரடங்கு அமுலிலுள்ள வேளைகளில் இவ்வாறு கொரோனா நோய் அறிகுறிகள் தென்படுமாயின் 0117 966 366 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தகவல் வழங்க முடியும் என்று செயல்பாட்டு மையம் அறிவித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துவரும் நிலையில் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு நடைமுறைகளை அறிமுகப்படுத்து வருகின்றது. (எ)




# இன்று முதல் மீள செயல்பாட்டை ஆரம்பிக்கும் பி.சி.ஆர்.இயந்திரம்

## சீனத் தூதரகம் தகவல்

கொழும்பு,நவ.02

கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் நிறுவப்பட்ட பி.சி.ஆர். இயந்திரத்தின் செயல்பாடானது வழமைபோன்று இன்று முதல் இயங்கும் என்று கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பி.சி.ஆர்.இயந்திரம் திடீரென பழுதடைந்ததால் சோதனை முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது.

இதன் காரணமாக சீனாவிலிருந்து தொழில்நுட்ப வல்லுநர்கள் வரவழைக்கப்பட்டு, இயந்திரத்தின் கோளாறு அடையாளம் காணப்பட்டது.

அதன் பின்னர் சுமார் 10 மணிநேரம் முன்னெடுக்கப்பட்ட திருத்தப் பணிகளின் பின் இயந்திரம் மீள ஆரம்பித்துள்ளது. இந்நிலையிலேயே இன்று முதல் இந்த இயந்திரத்தின் செயல்பாடுகள் வழமைபோன்று இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இரண்டு வைத்தியர்களுக்கு கொரோனா தொற்று உறுதி

கொழும்பு,நவ.02

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் மருத்துவர்கள் இருவரும் தாதியர் ஒருவரும் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை நேற்றுக்காலை உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ)

# கொரோனா தொற்றாளரை இனங்காண்பதில் இடர்பாடு

## முல்லை.சுகாதார சேவைகள் பணிப்பாளர் கவலை

முல்லைத்தீவு,நவ.02

கொரோனா தொற்றானது எவ்வித அறிகுறிகளும் இல்லாமலே மக்களிடத்தில் பரவிவருவதாலும், பி.சி.ஆர். பரிசோதனைகளிலும் தொற்றுள்ள பெரும்பாலானோருக்கு சாதாரண முடிவுகள் கிடைப்பதாலும் தொற்றாளர்களை இனங்காண்பதில் பாரிய இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.காண்டீபன் கவலை வெளியிட்டுள்ளார்.



கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டாலும் எந்தவிதமான அறிகுறிகளை காட்டாமலேயே மக்களிடத்தே பரவிவருகின்றது.

நாம் 14 நாள்கள் கடக்கும் வரையில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று கூறுவது கடினம்.

பி.சி.ஆர்.பரிசோதனையின் பிரகாரமே அறிகுறி இல்லாதவர்களுக்கும் தொற்று இருக்கின்றதா? இல்லையா? என்று முடிவுசெய்ய வேண்டியுள்ளது.

அதேவேளை பி.சி.ஆர்.பரிசோதனையிலும் 70 வீதமானவர்களுக்கு தொற்று இருந்தால்கூட சாதாரண முடிவுகளைக் காட்டுகின்றது.

ஆகையால், கொரோனா தொற்றைக் கண்டுபிடிப்பதென்பது மிகவும் கடினம்.

எனவே எமக்குச் சந்தேகமான அனைவரையும் சுயதனிமைப்படுத்தலிலோ அல்லது மற்றவர்களுடன் சம்பந்தப்படாத ஓர் இடத்திலேயோ தனிமைப்படுத்துவதை நாம் வழக்கமாகக் கொண்டுள்ளோம்-என்றார்.(எ)

## அதிகரிக்கும் தொற்றாளர்கள்

# ஒரேநாளில் 12 ஆயிரம் பி.சி.ஆர்.பரிசோதனைகள்

கொழும்பு, நவ.02

**நாட்டில் நேற்றுமுன்தினம் அதிகளவான பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

இதன்படி நேற்றுமுன்தினம் 12 ஆயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கொரோனா தொற்றை அடையாளம்காண கடந்த பெப்ரவரி மாதம் முதல் நேற்று முன்தினம் வரையான காலப்பகுதியில் இலங்கையில் மொத்தம் 5 இலட்சத்து 12 ஆயிரத்து 735 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை நாட்டில் நேற்று முன்தினம் 239 புதிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் 89 பேர் கொழும்பிலும், 28 பேர் இரத்தினபுரியிலும், 21 பேர் கம்பஹாவிலும், 20 பேர் களுத்துறையிலும், 11 பேர் வவுனியாவிலும், 10 பேர் கேகாலையிலும், 4 பேர் காலியிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களிலிருந்து 59 பேர் இவ்வாறு நேற்று முன்தினம் புதிய கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (எ)



# 67 ஆயிரத்திற்கும் அதிகமானோர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,நவ.02

நாடளாவிய ரீதியில் இதுவரை 67 ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

25 ஆயிரம் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவ்வாறு சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள யாரேனும் சட்டத்தை மீறி செயல்பட்டால் அவர்களுக்கு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார். (எ)

# பொடி லெஸியின் உதவியாளர் துப்பாக்கியுடன் நேற்றுக் கைது

கொழும்பு,நவ.02

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கொழும்பில் நேற்றுக் காலை துப்பாக்கியுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பாதாள உலகக் கும்பல் உறுப்பினரான பொடி லெஸியின் உதவியாளர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# ஊரடங்கை மீறிய குற்றச்சாட்டில் 24 மணிநேரத்தில் 153 பேர் கைது

கொழும்பு,நவ.02

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேர காலப்பகுதியில் 153 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் 35 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும், முகக்கவசம் அணியாத மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டில் 61 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (எ)

# மேல் மாகாணத்தை விட்டு வெளியேறிய 550 பேர் இதுவரை அடையாளம்

கொழும்பு,நவ.02

பொலிஸாரால் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவைப் புறக்கணித்து மேல் மாகாணத்தை விட்டு வெளியேறிய 550 பேரை இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# கொழும்பு குற்றவியல் பிரிவு 235 பொலிஸ் அதிகாரிகள் சுயதனிமைப்படுத்தப்பட்டனர்

கொழும்பு,நவ.02

கொழும்பு முகத்துவாரம், தெமட்டகொடை, மாளிகாவத்தை, மருதானை மற்றும் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையங்களில் மேலும் 10 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

அத்துடன் கொழும்பு குற்றவியல் பிரிவில் 235 பெண் பொலிஸ் அதிகாரிகள் சுயதனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர். (எ)

# தனிமைப்படுத்தப்பட்ட வயோதிபர் உயிரிழப்பு

தலைமன்னார்,நவ.02

தலைமன்னார் பியர் பகுதியில் சுயதனிமைப்படுத்தப்பட்ட 76 வயது முதியவர் ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்தார் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டி.வினோதன் தெரிவித்தார்.

இந்த நபர் கடந்த 23ஆம் திகதி கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியிலிருந்து வந்த நிலையில் தலைமன்னார் பியர் பகுதியிலுள்ள அவரது வீட்டில் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார் என குடும்பத்தினர் அறிவித்துள்ளனர் என்று வைத்தியர் வினோதன் தெரிவித்தார். (எ)

உலகச் செய்திகள்

## அருணாசல பிரதேசத்தில் நிலநடுக்கம்

புதுடில்லி, நவ 02

அருணாசல பிரதேசத்தின் சங்லாங் நகரில் இருந்து தென் மேற்கே 47 கி.மீ. தொலைவில் நேற்று காலை 8.01 மணியள வில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ள தாக தேசிய நிலநடுக்கவியல் மையம் தெரிவித்துள்ளது.

இது ரிச்டரில் 3.4 ஆக பதி வாகி உள்ளது எனவும் அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலநடுக்கத்தால் ஏறப் பட்ட சேத விவரங்கள் தொடர் பாக எந்தவொரு தகவலும் வெளியாகவில்லை.

இதேவேளை, மத்திய பிர தேச மாநிலத்தில் உள்ள சியோனி மாவட்டத்தில் நேற்று முன் தினம் பகல் 12.50 மணியளவில் ரிச்டரில் 3.1 அளவில் லேசான நிலநடுக்கம் உணரப்பட்டதாக தேசிய நிலநடுக்கவியல் மையம் குறிப்பிட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 27ஆம் திகதியும் சியோனி மாவட்டத் தில் 3.3 ரிக்டர் அளவில் நில நடுக்கம் ஏற்பட்டிருந்தது. இதன் தாக்கம் நாக்பூர் மாவட்டம் வரை உணரப்பட்டது.

இதனை தொடர்ந்து நேற்று முன் தினம் மாலை 6.16 மணிக்கு மீண்டும் சியோனி மாவட்டத் தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள், தங்கள் வீடுகளில் இருந்து வெளி யேறி வீதிகளுக்கு வந்துள்ளனர். இந்த நிலநடுக்கம் ரிக்டரில் 3.5 என்ற அளவில் பதிவாகியிருந்தது.

இதற்கிடையில் மத்திய பிரதேசத்தின் மற்றொரு மாவட்டமான சிந்த்வாராவில் நேற்று மாலை 5.20 மணிக்கு ரிக்டரில் 3.2 அளவில் நிலநடுக் கம் ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று, காஷ்மீரில் உள்ள லடாக் பகுதியில் நேற்று முன் தினம் இரவு 10.29 மணிக்கு ரிக்டரில் 4.1 அளவுள்ள நில நடுக்கம் ஏற்பட்டது. இதனை தொடர்ந்து சிறிது நேரத்தில் இரவு 11.36 மணிக்கு மீண்டும் லேசான நில அதிர்வு ஏற்பட்டது. அந்நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 3.8 ஆக பதிவாகியிருந்தது.

இந்தியாவின் வடக்கு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் உணரப்பட்டு வருவது மக்களி டையே பெரும் அச்சத்தை தோற் றுவித்துள்ளதாக இந்திய ஊட கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## பிரிட்டனில் இரண்டாம் முடக்கம்!

### பிரதமர் பொறிஸ் ஜோன்சன் அறிவிப்பு

லண்டன், நவ. 02

**எதிர்வரும் வியாழக்கிழமை 5 ஆம் திகதி முதல், 4 வார காலத்திற்கு இரண்டாவதும் புதியது மான, தேசிய அளவிலான முடக்கம், பிரிட்டனில் நடைமுறையில் இருக்கும் என பிரதமர் பொறிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.**

இதன்படி பப்கள், உணவகங் கள் மற்றும் அத்தியாவசியமற்ற சில்லறை விற்பனை நிலையங் கள், பொழுது போக்கு நிலை யங்கள், எதிர்வரும் நவம்பர் 5 ஆம் திகதி முதல், எதிர்வரும் டிசெம்பர் 2 புதன்கிழமை வரை மூடப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது.

எனினும் உணவகங்களில் இருந்து உணவை எடுத்துச் செல்லுதல் மற்றும் விநியோ கித்தலை தொடர முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வீட்டிலேயே இருக்க வேண்டும் என கோரப்பட்டுள்ள அதேவேளை, குடும்ப உறுப் பினர்களைத் தவிர்ந்த எவரும் வீடுகளில் ஒன்று கூடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன்வீட்டுக்கு வெளியே குடும்ப உறுப்பினர் அல்லாத ஒருவரைச் சந்திக்க முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, பாடசாலை கள், பல்கலைக்கழகங்கள், நீதி மன்றங்கள் மற்றும் கட்டுமானத் தொழில்கள் தொடர்ச்சியாக இயங்குவதற்கும், உயர்மட்ட அளவிலான விளையாட்டு களை தொடர்வதற்கும், வீட் டில் இருந்து பணியாற்ற முடி யாத அத்தியாவசிய தொழில் சார் நடவடிக்கைகள் உள்ளிட்ட பணியிடங்கள் தொழிற்படுவதற் கும் அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

எனினும் தொழில் சார்ந்த அத்தியாவசிய பயணங்கள் தவிர்ந்த அனைத்து சர்வதேசப் பயணங்களும் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## ஸ்பெயினில் வன்முறை

மட்ரிட், நவ 02

ஸ்பெயினில் ஊரடங்கு கட் டுப்பாட்டுகளுக்கு எதிராக நடைபெற்று வரும் போராட்டத் தில் வன்முறை வெடித்துள்ளது.

இந்நிலையில் கட்டுப்பாடு களுக்கு எதிராக நாடு முழு வதும் உள்ள நகரங்களில் நடக் கும் வன்முறைப் போராட்டங் களுக்கு ஸ்பெயினின் பிரதமர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர் “பொறுப்பு, ஒற்றுமை மற்றும் தியாகத்தி லிருந்து மட்டுமே எல்லா நாடு களையும் பேரழிவிற்கு உட்படுத் தும் தொற்றுநோயை தோற் கடிக்க முடியும். சிறுபான்மை குழுக்களின் வன்முறை மற்றும் பகுத்தறிவற்ற நடத்தை தாங்க முடியாதது. அது வழி அல்ல” என கூறியுள்ளார்.

கொரோனா வைரஸ் பர வலின் இரண்டாம் அலை தொடங்கியதையடுத்து அங்கு 6 மாத காலத்திற்கு அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டு கடு மையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மட்ரிட் நகரில் கூடிய போராட் டக்காரர்கள், வீதிகளில் இருந்த குப்பைத் தொட்டிகளுக்கு தீ வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தை கட்டுக்குள் கொண்டுவர முயன்ற பொலி ஸார் மீது கற்கள் வீசி தாக்கப் பட்டதால் இருதரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

## பசுமைக் கட்சியுடன் சேர்ந்து அரசமைக்கின்றார் ஜெசிந்தா

வெலிங்டன், நவ 02

நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டெர்னின் தொழிலாளர் கட்சி நேற்று ஞாயிற்றுக் கிழமை பசுமைக் கட்சியுடன் அரசை அமைப்பதற்கான ஒப் பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

கடந்த மாத தொடக்கத்தில் இடம்பெற்ற பொது தேர்தலில் வெற்றியை பெற்ற தொழிலாளர் கட்சி, ஆட்சிக்கு மற்ற கட்சி களின் ஆதரவு தேவையில்லை என்றாலும், கட்சிகள் ஒருமித்த கருத்தை உருவாக்க முற்படுவ தால் கூட்டணிகள் அமைப்பது என்பது நியூசிலாந்தில் வழக்க மான ஒன்றாக காணப்படுகின்றது.

புதிய அரசு இன்று அறிவிக் கப்படும் என ஜெசிந்தா கடந்த சனிக்கிழமை அறிவித்திருந்தார். இந்நிலையில் தற்போது அமைக் கப்பட்டுள்ள கூட்டணி காரண மாக பசுமைக் கட்சிக்கு இரண்டு அமைச்சுப் பதவிகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாக கருத்து வெளி யிட்டுள்ள நியூசிலாந்து பிரத மர் ஜசிந்தா ஆர்டெர்ன், பசுமை வாதிகள் தங்கள் அமைச்சின் மூலம் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து அரசை ஆதரிக்க கடமைப்பட்டுள்ளனர், ஆனால் தொழிற்கட்சிக்கு வேறுபட்ட நிலைப்பாட்டை எடுக்க உரிமை உண்டு என கூறினார்.

இதேவேளை “எங்களுக்கு ஒரு நல்ல ஆணை இருப்பதில் நான் மீண்டும் பெருமைப்படு கிறேன், ஏனென்றால் இது ஒர் ஒத்துழைப்பு ஒப்பந்தமாகும், இது பசுமைவாதிகளுக்கு கிடைத்த வெற்றியாகும்” என பசுமைக் கட்சியின் பிரதித் தலைவர் மராமா டேவிட்சன் கூறினார்.

## கொரோனா பரவலின் எதிரொலி ஈரானில் புதிய கட்டுப்பாடுகள்!

தெஹ்ரான், நவ 02

கொரோனா வைரஸ் தொற்று பரவலைத் தடுக்கும் முயற்சியாக ஈரானிய ஜனாதி பதி ஹசன் ரூஹானி நாடு முழுவதும் புதிய கட்டுப்பாடு களை அறிவித்துள்ளார்.

தேசிய கொரோனா வைரஸ் பணிக்குழுவின் தொலைக் காட்சி கூட்டத்தின்போது இந்தப் புதிய கட்டுப்பாடுகள் நேற்று முன் தினம் அறிவிக் கப்பட்டன.

இந்தக் கட்டுப்பாடுகளால், ஈரானின் 31 மாகாணங்களில் 25இல் வைரஸ் தீவிர நிலையி லுள்ள 46 மாவட்டங்களின் இயல்புநிலை பாதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் புதன்கிழமை முதல், அந்த மாவட்டங்களில் உள்ள திரை யரங்குகள், களியாட்ட விடுதி கள், ஜிம்கள் மற்றும் முக்கிய தளங்கள் 10 நாட்களுக்கு மூடப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை ஈரானில், இதுவரை ஆறு இலட்சத்து 12 ஆயிரத்து 772 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளதுடன் தினசரி பாதிப்பு எண்ணிக்கை இரண்டு மாதங்களுக்குள் நான்கு மடங்காக அதி கரித்துள்ளதாக அந்நாட்டு சுகாதார அமைச்சகம் தெரி வித்துள்ளது

## பிரான்ஸில் அருட்தந்தை சுடப்பட்டார் தாக்குதலாளி துப்பாக்கியுடன் ஓட்டம்!

பரிஸ், நவ 02

பிரான்ஸில் இரண்டாவது பெரிய நகரமான லியோனில் ஒர்தோடொக்ஸ் தேவாலயம் ஒன்றின் அருட்தந்தை அடையாளம் தெரியாத நபர் ஒரு வரால் சுடப்பட்டதில் படுகாயமடைந்துள்ளார்.

லியோன் நகரின் ஏழாவது வட்டாரத்தில் நேற்று முன் தினம் சனி மாலை 4மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தேவாலயத்தை மூடிவிட்டு அங்கிருந்து வெளியேறிய சமயம் அருட்தந்தையை நெருங்கி வந்த நபர் ஒருவர் தன்னுடன் மறைத்து வைத்தி ருந்த துப்பாக்கியை எடுத்து இரண்டு தடவைகள் சுட்டார் என்று கூறப்படுகிறது. வயிற்றில் குண்டு பாய்ந்த நிலையில் அருட்தந்தை சுயநினைவிழந் துள்ளார் என்று முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன.

கிரீஸ் நாட்டைச் சேர்ந்த கே. நிக்கோலா என்ற 52 வயதுடைய அருட்தந்தையே சுடப்பட்டவர் ஆவார். உயிராபத்தான கட்டத்தில் அவ்விடத்தில் வைத்தே அவசர முதலுதவி அளிக்கப்பட்ட அவர் பின்னர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டார். கைத்துப்பாக்கியுடன் தப்பியோடிய தாக்குதலாளியை பொலிஸார் வலைவிரித்து தேடிவருகின்றனர்.

தாக்குதல் நடைபெற்ற பகுதியை பொலிஸார் மூடியிருக்கின்றனர். அங்கு நெருக்கடியைக் கையாள் வதற்கான பிரிவு ஒன்றை உள்துறை அமைச்சு உடனேயே திறந்திருக்கிறது. நீஸ் நகரத் தாக்குதல் நடைபெற்று ஒரிரு நாட்களில் தற்சமயம் அருட்தந்தை ஒருவர் சுடப்பட்டிருக்கிறார்.

நீஸ் தேவாலய சம்பவத்தை அடுத்து பிரான்ஸ் முழுவதும் தாக்குதல் முன்னெச்சரிக்கை நிலைமை அறிவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே. தேவாலயங் களுக்கும் பாடசாலைகளுக்கும் பாதுகாப்பு வழங்கப் பட்டுள்ளது. சுமார் ஏழாயிரம் இராணுவத்தினரை அரசு ரோந்துக் கடமையில் ஈடுபடுத்தி உள்ளது.

# மஹிந்தவை ஐ.நா. அலுவலகம் விருந்தினராக அழைத்தது தவறு

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு





**யாழ்ப்பாணம், நவ. 02**
**இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை பிரதம விருந்தினராக அழைத்தமை தவறானது என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.**

ஐக்கிய நாடுகள் சபையின் 75 ஆண்டு நிறைவை முன்னிட்டு இலங்கையில் உள்ள ஐ.நா. அலுவலகம் இணையவழி ஏற்பாடு செய்திருந்த நிகழ்வொன்றில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற பல்வேறு மனித உரிமைகள் மீறல் தொடரிபில் ஐ.நா விடம் முறையிட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் பொறுப்புக் கூற வேண்டிய அவரையே பிரதம விருந்தினராக அழைத்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் வினவிய போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறுகையில்,

'ஐ.நாவின் தீர்மானங்கள் இலங்கையில் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதே அனைவரின் நிலைப்பாடாகும். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த அமெரிக்க இராஜாங்க செயலரும் அதனை வெளிப்படுத்தி சென்றிருக்கின்றார். இந்த நிலையில் விசாரணை செய்யப்பட வேண்டிய அல்லது அது தொடர்பில் கேள்விக்குட்படுத்த வேண்டிய ஒருவரை பிரதம விருந்தினராக அழைத்தமை ஏற்புடையதாக இருக்காது என்பது எனது கருத்து.

மனித உரிமைகள் மீறல் தொடர்பில் விசாரணை செய்யப்பட வேண்டியவர்களின் பெயர் பட்டியலில் மஹிந்த ராஜபக்ஷவின் பெயரும் இருக்கிறது. அந்த வகையில் ஐ.நா.கொழும்பு அலுவலகம் அவரை பிரதம விருந்தினராக அழைத்தது தமிழ் மக்களுக்கு ஐ.நா. சபை மீது தவறான பார்வையை ஏற்படுத்தும்.

ஐ.நாவின் தீர்மானத்திலிருந்து விலக போவதாக இலங்கை அரசு அறிவித்திருக்கும் நிலையில் இச் செயற்பாடு முழு ஐ.நா. சபையையே தமிழ் மக்கள் சந்தேகின்ற நிலையை ஏற்படுத்தும். ஆகவே இந்த விடயத்தில் ஐ.நா. தமிழ் மக்கள் விடயத்தில் சரியாக நடந்துகொள்ளுமா என்ற சந்தேகத்தை தமிழ் மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்-

இது மிக மிக பொருத்தமற்ற ஒரு நிலைப்பாடு. இலங்கையில் நடைபெற்றதாக சொல்லப்படுகின்ற மனித உரிமைகள் மீறல் தொடர்பில் ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு வெளியிட்ட விசேட அறிக்கை, அதனைவிட இலங்கையில் ஐ.நா. தவறுவிட்டதாகத் தெரிவிக்கும் அறிக்கை இவை எல்லாவற்றிலும் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதாகவும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டதாகவும் பல விதமான யுத்த குற்றச் சாட்டுகள் இடம் பெற்றதாகவும், ஐ.நாவே தெரிவித்துள்ள நிலையில் இதற்கு பொறுப்புக் கூறவேண்டிய ஒருவரை ஐ.நா. தன்னுடைய நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அழைப்பது மிக மிக தவறான ஒன்றாகும் - என்றார்.



# யாழில் நேற்று இரத்ததானம்


யாழ்ப்பாணம்,நவ.02

ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகத்தினரின் ஏற்பாட்டில் நேற்று இரத்ததான முகாம் இடம்பெற்றது.

வடபகுதியில் தற்போது குருதித் தட்டுப்பாடு நிலவிவரும் நிலையில் ஆரியகுளம் முற்போக்கு வாலிபர் கழகத்தினரின் ஏற்பாட்டில் தெல்லிப்பழை வைத்தியசாலை இரத்த வங்கியினருக்கு குருதிக்கொடை வழங்கப்பட்டது.

தெல்லிப்பழை இரத்த வங்கி பொறுப்பதிகாரி மருத்துவர் என். பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த இரத்ததான நிகழ்வில் 50இற்கும் மேற்பட்டவர்கள் குருதிக்கொடை வழங்கினர். (எ)

# 105 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா தொற்று உறுதி



கொழும்பு,நவ.02

பொலிஸ் அதிகாரிகள் 105 பேர் கொரோனாவைரஸ்தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

தெமட்டகொடையிலுள்ள கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பெண் பொலிஸ் அதிகாரி உட்பட இருவர் நேற்று கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்.

இதன்மூலம் இங்கு மட்டும் 26 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர்- என்றார். (எ)

# மேல் மாகாணத்தில் ஊரடங்கை நீக்குவது உகந்த விடயமில்லை

## பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம்

கொழும்பு,நவ.02

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவை நீக்குவது உகந்த விடயமில்லை என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தற்போது நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டத்தை நீக்குவதால் ஏனைய பகுதிகளுக்கு கொரோனா வைரஸ் பரவும் ஆபத்துள்ளது.

ஊரடங்கு உத்தரவு நீக்கப்பட்ட பின்னர் வைரஸ் பரவல் அதிகரித்தால் அதற்கான பொறுப்பை சுகாதார அதிகாரிகளும், அரசாங்கமும் ஏற்க வேண்டும்.

தற்போது கொரோனா வைரஸ் பரவல் கொழும்பு மாநகர சபை எல்லை மற்றும் வத்தளையுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே ஏனைய இடங்களுக்கு வைரஸ் பரவல் ஏற்படுவதைத் தடுத்து நிறுத்த ஊரடங்கு உத்தரவை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்-என்றார். (எ)

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 506 பேர் குணமடைவு

கொழும்பு,நவ.02

நாட்டில் நேற்று மாலை 4 மணி வரையான காலப்பகுதியில் மேலும் 506 கொரோனா தொற்றாளர்கள் குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 4,905 ஆக உயர்வடைந்துள்ளது. (எ)

# உடுவிலில் நேற்று தொற்று நீக்கல்

யாழ்ப்பாணம்,நவ.02

யாழ்ப்பாணம் உடுவில் பகுதியில் கொரோனா தொற்றாளர்கள் இருவர் இனங்காணப்பட்டுள்ள நிலையில் பிரதேச சபையினர், உடுவில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், சுகாதாரப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் உதவியுடன் நேற்றுத் தொற்று நீக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அப்பகுதி மக்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள், மற்றும் தனிமைப்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வுகளும்

ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டதோடு, இந்தப் பகுதி மக்கள் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்கஅறிவுறுத்தப்பட்டுள்ளனர். (எ)





செய்திகள்

# 1592 குடும்பங்களை சேர்ந்த 3959 பேர் தனிமைப்படுத்தல்

## மட்டு.அரச அதிபர் தகவல்

மட்டக்களப்பு,நவ.02

மட்டக்களப்பு மாவட்டத்தில் 1592 குடும்பங்களைச் சேர்ந்த 3959 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மாவட்ட அரச அதிபர் கே. கருணாகரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் வீடுகளில் தனிமைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக கொரோனா வைரஸ் தொற்று என வைத்திய பரிசோதனைகள் மூலம் உறுதியானவர்களும் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 35 பேர் தற்போது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 31 பேரும் வெல்லாவெளி, பட்டிப்பளை, களுவாஞ்சிகுடி, ஒட்டமாவடி ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் தலா ஒருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா நோய் தொற்றால் தொழில் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு தனிமைப்படுத்தலிலுள்ள குடும்பங்களுக்கு இரண்டு வாரங்களுக்கு தேவையான 5000 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருட்களை வழங்குவதற்கான நிதி திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கலவால் உடனடியாக விடுவிக்கப்பட்டுள்ளது.



இதேவேளை அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்ற பகுதியாக கோறளைப்பற்று மத்தி பிரதேசம் உள்ளது.

இங்கு 1335 பேர் தனிமைப்படுத்தலுக்கும் 31 பேர் சிகிச்சை பெற்றும் வருகின்றனர்

பட்டிப்பளை பிரதேசத்தில் 11 குடும்பங்களைச் சேர்ந்த 47 பேரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் அனைவரும் வெளிமாவட்டங்களில் தொழில் நிமித்தம் சென்று வந்தவர்களாகவே உள்ளனர். இவர்களுக்கான மருத்துவ உதவிகளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரிகளின் கண்காணிப்பில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து செயல்படுத்தி வருகின்றனர். (எ)

# மக்கள் நலன்களை பாதுகாக்கும் தனித்துவமான நாடாக இலங்கை

## அமைச்சர் டக்ளஸ் நம்பிக்கை

**வவுனியா,நவ.02**

**மக்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில் தனித்துவமான நாடாக இலங்கை இருக்கும் என்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.**



வவுனியாவுக்கு நேற்று பயணம் செய்த அவர் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் காரியாலத்தைத் திறந்து வைத்து ஊடகங்களுக்கு இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் தலைமையில் மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும், முன்னேற்றுவதற்கும் முழு முயற்சிகளை நாம் எடுப்போம்.

உலகளாவிய ரீதியில் இன்று பிரச்சனையாகவுள்ள கொரோனா தொற்று நோயானது இலங்கையையும் பாதித்திருந்தது. அதன் முதல்கட்டத்தை நாம் வெற்றிகரமாக எதிர்கொண்டிருந்தோம். அந்த நம்பிக்கை மற்றும் அதன் பாதிப்புக்கள் குறைவடைந்தமையால் எமது மக்கள் கவனவீனமாக இருந்துவிட்டார்கள். எனினும் வருங்காலத்தில் விரைவான நடவடிக்கை எடுத்து இந்த் தொற்றை நாம் நிச்சயம் கட்டுப்படுத்துவோம். அத்துடன் பாதிப்புக்கள் ஏற்பட்டவர்களுக்கு அதிலிருந்து மீண்டு வரத் திட்டங்களையும் முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவோம்-என்றார்.

இதேவேளை, அமெரிக்கா மற்றும் சீனாவின் ஆதிக்கம் இலங்கையின் இருப்பைக் கேள்விக்குட்படுத்துமா? என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோது, எந்த நாட்டினரும் தமது நாட்டின் நலன்களை முன்னிறுத்தியே பல்வேறு முடிவுகளை எடுப்பர். அதுபோன்று எமது நாட்டின் நலன்களை முன்னிறுத்தி அதனைப் பாதுகாத்தே எமது முடிவுகளை எடுப்போம். எங்களைப்போன்ற நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் உதவிகளை எதிர்பார்த்து உள்ளன. எனினும் எமது

ஜனாதிபதியும், பிரதமரும் கடந்த கால ஆட்சியாளர்கள் போன்று நடந்துகொள்ளாமல் மக்களின் நலன்களைப் பாதுகாக்கக்கூடிய வகையில், நாட்டின் தனித்துவத்தைப் பேணி உதவிகளைப் பெற்று வருகின்றனர்.

இதேவேளை, 20 ஆவது திருத்தத்தை உருவாக்க பலநாள்கள் கூடிய பாராளுமன்றம் தற்போது நாளை 3ஆம் திகதி மட்டும் கூடத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எனவே கொரோனாவைச் சாட்டி அரசின் நிகழ்ச்சி நிரல்களுக்கு இவ்வாறான செயல்பாடுகள் இடம்பெறுகிறதா? என ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பிபோது, அப்படியல்ல மக்களினுடைய நலன் மற்றும் நாட்டின் நலனை முன்னிறுத்தியே சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். அனைத்து அரசியல்கட்சிகளுடனும் கலந்துரையாடியே அந்த முடிவுகள் எடுக்கப்பட்டன- என்றார்.

காரியாலயத் திறப்பு விழாவில் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன், மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன, மேலதிக அரச அதிபர் தி. திரேஸ்குமார் மற்றும் பிரதேச செயலாளர்கள், கலந்து கொண்டனர். (எ)

# இலங்கைக்கு கடத்த முயன்ற 2,000 கிலோ மஞ்சள் பறிமுதல்

## கியூ பிரிவு பொலிஸார் நடவடிக்கை

தனுஷ்கோடி,நவ.02

தனுஷ்கோடி கடல்வழியாக இலங்கைக்குப் படகில் கடத்த முயன்ற இரண்டாயிரம் கிலோ கிராம் நிறையுடைய 75 மஞ்சள் மூடைகளை நடுக்கடலில் வைத்து நாட்டுப்படகுடன் கியூ பிரிவு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இராமேஸ்வரம் மண்டபம் வடக்குக் கடல்வழியாக வெளிமாவட்ட படகு ஒன்றில் இலங்கைக்குக் கடத்தல் பொருள்கள் அனுப்பப்படவுள்ளன என கியூ பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மண்டபம் வடக்குக் கடற்கரையில் நேற்று முன்தினம் நள்ளிரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

இதன்போது மண்டபம் வடக்கு மீன்பிடித்துறைமுகம் அருகே கரையில் உரிய பதிவு எண் இல்லாத நாட்டுப் படகு ஒன்று நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டிருந்தது. இதனைக் கண்ட கியூ பிரிவு பொலிஸார் படகில் ஏறிச் சோதனை செய்தனர்.

அப்போது படகில் இலங்கைக்குக் கடத்த 75 மூடைகளில் மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து பொலிஸார்



மேற்கொண்ட விசாரணை யில் இந்த நாட்டுப் படகு தங்கச்சிமடத்தைச் சேர்ந்தது என தெரியவந்துள்ளது.

இந்த நாட்டுப்படகு தூத்துக்குடி மாவட்டத்திலிருந்து தனுஷ்கோடி கடல்வழியாக இலங்கைக்கு மஞ்சள் கடத்திச் செல்ல மண்டபம் வந்ததாகவும், இலங்கையில் கடந்த சில வாரங்களாக கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்தது வருவதால் வார இறுதி நாள்களில் தளர்வு இல்லா ஊரடங்கு அமலில் இருந்ததால் இலங்கை மீனவர்களை மீன் பிடிக்க கடலுக்குள் அனுமதிக்கவில்லை என்பதாலும், மீனவர்கள் என்ற போர்வையில் கடத்தல்காரர்கள் இலங்கைக்கு வரமுடியாததால், மஞ்சள் கடத்தி வந்த கடத்தல்காரர்கள் பாம்பனில் நாட்டுப்படகை விட்டுவிட்டு சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய கடத்தல்காரர்களைத் தீவிரமாகத் தேடி வருவதாகவும், விரைவில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் எனவும் கியூ பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி சுமார்65 இலட்சம்ரூபா எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(எ)

# வாழைச்சேனையில் நேற்று ஐவருக்கு தொற்று உறுதி

மட்டக்களப்பு,நவ.02

மட்டக்களப்பு வாழைச்சேனை மத்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் நேற்று ஐந்து கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட வாழைச்சேனையில் மூவரும் பிறைந்துறைச்சேனையில் ஒருவரும், மாவடிச்சேனையில் ஒருவருமாக ஐந்து புதிய தொற்றாளர்கள் நேற்று இனங்காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் இதுவரை 36 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (எ)

# கடன்களை திருப்பிச் செலுத்த மீனவர்களுக்கு சலுகை காலம்

கொழும்பு,நவ.02

மீனவர்கள் கடன்களைத் திருப்பிச் செலுத்த நிவாரண காலத்தை பிரகடனப்படுத்தி மூலதனக் கடன் வழங்கும் திட்டம் அமுலாக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

துறைமுகங்களில் குவிந்துள்ள மீன்களைக் கொள்வனவு செய்ய 30 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

கடற்தொழில் அமைச்சின் நிதியொதுக்கீட்டில் இந்த மீன்கள் கொள்வனவு செய்யப்படும். ரின் மீன் உற்பத்தியாளர்கள், கருவாடு மற்றும் மாசி உற்பத்திகளில் ஈடுபடுவோர், குளிரூட்டல் வசதிகளைக் கொண்டவர்த்தகர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுடன் பேச்சு நடத்தி கடலுணவை விநியோகிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது-என்றார். (எ)

செய்திகள்

### யாழ். பல்கலைக்கழகத்தின்

# நுண்கலை, சித்தவைத்திய துறைகளை பீடங்களாக தரமுயர்த்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ. 02

**யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மேலும் இரண்டு பீடங்களை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான முன்மொழிவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பல்கலைக் கழகப் பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.**

மருதனார்மடத்தில் அமைந்துள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகவும், கைதடியில் அமைந்துள்ள சித்த வைத்தியத் துறையை சித்த வைத்திய பீடமாகவும் தரமுயர்த்துவதற்கான முன்மொழிவுகளே நேற்றைய பேரவைக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கல்லூரியை நுண்கலைப் பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையிலும், சித்தவைத்தியத்துறையை சித்த வைத்திய பீடமாகத் தரமுயர்த்துவதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென முன்னாள் துணைவேந்தர் சு. மோகனதாஸ் தலைமையிலும் பேரவையினால் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

அந்தக் குழுக்கள், பல்வேறு கள ஆய்வுகள், சந்திப்புகளின் முடிவில் தங்கள் சிபாரிசுகள் மற்றும் திட்ட முன் மொழிவுகளை நேற்று இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்தன. அவற்றை இம்மாதம் இடம்பெறவுள்ள விசேட மூதவை (செனற்) கூட்டமொன்றில் முன்வைத்த பின், மூதவையின் சிபாரிசுடன் விசேட பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பித்து, பேரவை அங்கீகாரத்துடன் பீடங்களைத் தரமுயர்த்துவதற்கான வேண்டுகையைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. (3)

## வர்த்தகர் முன்மாதிரி



வடமராட்சி, நவ. 02

தொற்று அபாய நிலை கருதி பருத்தித்துறையில் வர்த்தகர் ஒருவர் முன்மாதிரியாக தனது கடையை மூடியுள்ளார்.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இயங்கி வந்த ஐஸ்கிறீம் நிலைய உரிமையாளரே இவ்வாறு தனது வர்த்தக நிலையத்தை மூடியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மை நாட்களாக கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர். வடமராட்சியிலும் மூன்று பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ - 2)

## ஊரடங்கை மீறி படப்பிடிப்பு தொலைக்காட்சி குழு கைது

கொழும்பு, நவ. 02

மேல் மாகாணத்தில் ஊரடங்கு உத்தரவு விதிக்கப்பட்ட பின்னர் கொழும்பிலிருந்த பண்டாரவளைக்கு சென்ற நடிகர், நடிகையர் உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர் குழுவினர் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பிரபல சிங்கள தொலைக்காட்சி நடிகை ஷலானி தாரகவும் கைது செய்யப்பட்டுள்ளார். பண்டாரவளை பகுதியிலுள்ள குடியிருப்பார்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார் நடத்திய சோதனையில் அவர்கள் சிக்கினர்.

அவர்கள் அனைவரும் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## கேகாலை மாவட்டத்தில் சுற்றுலா விடுதிகள் முடக்கம்

கேகாலை, நவ. 02

கேகாலை மாவட்டத்தில் உள்ள அனைத்து சுற்றுலா விடுதிகளையும் தற்காலிகமாக மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சப்ரகமுவ மாகாண ஆளுநரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தை சேர்ந்தவர்கள் வறக்காபொல உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள சுற்றுலா விடுதிகளில் தங்கியுள்ளதாக கிடைத்த தகவலுக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கேகாலை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர், டாக்டர் பத்மகுமார விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கேகாலை மாவட்டத்தில் கொரோனா நோயாளர்கள் 74 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், 2850 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

### வடக்கு மாகாணத்தை சேர்ந்த

## 385 பேருக்கு பி.சி.ஆர். எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், நவ. 02

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் புதிதாக எவருக்கும் தொற்றில்லை என்று தெரியவந்துள்ளது.

வடக்கு மாகா ணத்தை சேர்ந்த 385 பேருக்கு பி.சி.ஆர். பரிசோ தனைகள் நேற்று இடம்பெற் றிருந்தன. அவற்றில் புதிய தொற்றாளர்கள் எவரும் கண்டறியப்படவில்லை.

எனினும், மருதங்கேணி கொரோனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் 8 பேருக்கு நேற்று மீண்டும்



நடத்தப்பட்ட கொரோனா தொற்றுப் பரிசோதனையில் அவர்களுக்கு மீண்டும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை, கடந்த இரு நாட்களில் வடக்கு மாகாணத்தில் புதிய தொற்றாளர்கள் எவரும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### கொரோனா ஒழிய வேண்டி

## மந்திரித்த நீரை ஆற்றில் சேர்த்தனர் அமைச்சர்கள்

கொழும்பு, நவ. 02

கொரோனா ஒழிய வேண்டும் எனப் பிரார்த்தித்து மந்திரித்த நீரை பிரதான ஆறுகளில் முக்கிய அமைச்சர்கள் கலந்தனர்.

பிரதமரின் வைத்தியரான எலியந்த வைற் வழங்கிய மந்திரித்த நீரை அமைச்சர்களிடம் அனுப்பினர். சுகாதார அமைச் சர் பவித்ரா வன்னியாராச்சி களு கங்கையிலும், பிரசன்ன ரணதுங்க, உதய கம்மன்பில ஆகியோர் களனி கங்கையின் வெவ்வேறு இடங்களிலும் தண்ணீரை கலந்தனர்.



இதேபோல நாட்டின் பல பகுதிகளிலுள்ள கங்கைகளில் மந்திரிக்கப்பட்ட தண்ணீரை கலக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்டுக்கடங்காமல் பரவும் கொரோனாவை கட்டுப்படுத்த வழிபாடுகளில் ஈடுபடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

இதற்கமைய இன்று இந்து ஆலயங்களில் வழிபாடு நடத்துமாறு கேட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## திருநெல்வேலி, கொக்குவில் சந்தைகளை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானம்



யாழ்ப்பாணம், நவ. 02

சுகாதார நடைமுறைகளை, விதிகளை பின்பற்றாமல் அசண்டையீனமாக நடந்து கொண்டால் சந்தைகளை மூட நடவடிக்கை எடுக்க தீர்மானித்துள்ளதாக நல்லூர் பிரதேச சபை தவிசாளர் த. தியாக மூர்த்தி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்திலுள்ள பிரதான சந்தைகளில் ஒன்றான திருநெல்வேலி சந்தை மற்றும் கொக்குவில் சந்தை ஆகியன நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்டது.

இந்த சந்தைகளுக்கு தினமும் பெருமளவான மக்கள் வந்து செல்கின்றனர். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனோ தொற்று அபாயத்திலிருந்து மக்களை பாதுகாக்கும் முகமாக எமது ஆளுகைக்கு உட்பட்ட சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள் சந்தைக்கு வரும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளையும் விதிகளையும் பின்பற்றுமாறு கோரி வருவதுடன் எமது சபையின் உத்தியோகத்தர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

“இருந்த போதிலும் பெருமளவான வியாபாரிகள் , பொதுமக்கள் சுகாதார நடைமுறைகள் விதிகளை மீறி செயற்படுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

தொடர்ந்து இவ்வாறான செயல்பாடுகளில் வியாபாரிகள் , பொதுமக்கள் ஈடுபட்டால் எமது ஆளுகைக்குள் உள்ள திருநெல்வேலி சந்தை மற்றும் கொக்குவில் சந்தை என்பவற்றை மூடுவதற்கு நடவடிக்கை எடுப்போம்”, என்றார்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



# மோர்கனின் அதிரடியில் கொல்கத்தா பெருவெற்றி

டுபாய், நவ. 02

மோர்கனின் அதிரடி ஆட்டத்தில் ராஜஸ்தான் அணியை 60 ஓட்டங்களால் வெற்றி கொண்டது கொல்கத்தா.

ஐ.பி.எல்லில் நேற்றிரவு நடந்த 54ஆவது ஆட்டத்தில் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியும் ஸ்மித் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபட்டது.

துடுப்பெடுத்தாடிய கொல் கத்தா அணிக்கு சப்மன் கில், ராணா இணை தொடக்கம் கொடுத்தது. எதிர்கொண்ட முதல் பந்திலேயே ராணா ஆட்டமிழந்தார்.

சப்மன் கில்லுடன் சேர்ந்த திரிபாதி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த இணை 72 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்ற நிலையில் கில் 36 ஓட்டங்களுடன் வெளியேறினார். அவர் வெளியேறிய இரண்டாவது பந்திலேயே திரிபாதி 39 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

சுனில் நரைன் ஓட்டம் எதனையும் பெறாமல் வெளியேறிய நிலையில் களம்புகுந்த கப்டன் இயன் மோர்கன் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவரின் பின் வந்த தினேஷ் கார்த்திக் 0, ரஷல் 25, கம்மின்ஸ் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். ஆனாலும், மோர்கன் அதிரடியாக ஆடி அரைச்சதம் கடந்தார்.

நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கெட்களை இழந்த கொல்கத்தா 191 ஓட்டங்களைப் பெற்றது.

ராஜஸ்தானின் பந்து வீச்சில் தெவாட்டியா 3, கார்த்தி தயாகி 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணியால் கொல்கத்தாவின் பந்து வீச்சுக்களை சமாளிக்க முடியவில்லை.

தொடக்கம் கொடுத்த உத்தப்பா 6, ஸ்ரோக்ஸ் 18, ஸ்மித் 4, சாம்ஸன் 1, பிராக் 0 என 37 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

பட்லர் 35, தெவாட்டியா 31 ஆகியோர் மட்டும் சிறிது போராடினர். இதனால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் வரை போராடிய ராஜஸ்தான் அணி 9 விக்கெட்களை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது.

கோபால் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களைப் பெற்றார்.

அபார பந்து வீச்சை வெளிப்படுத்திய கம்மின்ஸ் 4, சிவம் மவி, வருண் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக பட் கம்மின்ஸ் தெரிவானார். (ஐ)

# சென்னை அசத்தல் வெற்றி: பஞ்சாப்பை வெளியேற்றியது

அபுதாபி, நவ. 02

கெய்க்வாட்டின் ஹட்ரிக் அரைச்சதத்தின் உதவியால் பஞ்சாப் அணியை 9 விக்கெட்களால் வெற்றி கொண்டது சென்னை. இந்தத் தோல்வியின் மூலம் பிளே ஒவ் சுற்று வாய்ப்பை இழந்தது பஞ்சாப் அணி.

13ஆவது ஐ.பி.எல். தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கிறது. இதில் அபுதாபியில் நேற்றுப் பகல் நடந்த 53ஆவது போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதின.



நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்னை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடியது பஞ்சாப். அணித் தலைவர் கே.எல். ராகுல், மயங் அகர்வால் இணை தொடக்கம் கொடுத்தது. ஓரளவுக்கு சிறப்பான தொடக்கத்தைக் கொடுத்தனர்.

15 பந்துகளை சந்தித்த மயங்க் அகர்வால் 5 பௌண்ட்ரிகளை விளாசி, 26 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் நிகிடியின் பந்தில் ஆட்டமிழந்தார் ராகுல்.

அதிரடி வீரர் கெய்ல் 12, பூரன் 2, மன்தீப் சிங் 14 என்று, நஷீம் 2 ஓட்டங்கள் என்று வேகமாக ஆட்டமிழந்தனர்.

ஹூடா மட்டும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவரின் அரைச்சதத்தின் உதவியால் பஞ்சாப் அணி ஓரளவு போராடக்கூடிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது.

20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

ஹூடா 30 பந்துகளில் 4 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளை விளாசி 62 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

சென்னையின் பந்து வீச்சில் நிகிடி 3 விக்கெட்களையும், தாகூர், இம்ரான் தஹீர், ஜடேஜா ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென்னைக்கு கெய்க் வாட், டூ பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது.

இருவருமே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். டூ பிளசிஸ் 4 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்களை விளாசி 48 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

18.5 ஓவர்களில் வெற்றி இலக்கான 154 ஓட்டங்களை அணி பெற்றது. இதில் கெய்க் வாட், 6 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன் 62 ஓட்டங்களையும், ராயுடு 2 பௌண்ட்ரிகளுடன் 30 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

பஞ்சாப்பின் ஜோர்தன் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்.

கெய்க்வாட் ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ஐ)

DREAM11 IPL

## இன்றைய ஆட்டம்

டில்லி கப்பிட்டல்ஸ் **எதிர்** பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

**மைதானம் : அபுதாபி**

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

அருந்ததி
இணைய திருமண சேவை
0777 164 524 www.arunthathee.com

மணமகள் விபரம்
15535 | வே | 1979
வட்டுக்கோட்டை | இந்து
Teacher | SL | 158 செ.மீ
அத்தம் (கன்னி) | செவ் : 7

15922 | வே | 1984
நெல்லியடி | இந்து
General Manager
இலங்கை | பூசம் (கடகம்)

15766 | வே | 1987
நல்லூர் | இந்து
Engineer | SL | சூ-செவ் : 6
பூராடம் (தனுசு) | 163 செ.மீ

15829 | வே | 1989
சிவபுரி | இந்து | Australia
Reg. Migrant Agent
அத்தம் (கன்னி) | 168 செ.மீ

16024 | வே | 1990
உரும்பிராய் | இந்து
Civil Engineer | SL | 175செ.மீ
கார்த்திகை (இடபம்)

மணமகள் விபரம்
15616 | வே | 1984
புங்குடுதீவு | இந்து
Lawyer | SL | 172 செ.மீ
பூரட்டாதி (கும்பம்)

15775 | வே | 1990
திருகோணமலை | இந்து
Lawyer | SL
கேட்டை (விருச்சிகம்)

15772 | வே | 1991
சுன்னாகம் | இந்து
Assistant Engineer | SL
ரேவதி (மீனம்) | 162 செ.மீ

15559 | கு | 1994
கிளிநொச்சி | இந்து
BA Following | SL
மூலம் (தனுசு)

16150 | வே | 1995
ஏழாலை | இந்து
SL | 162 செ.மீ
திருவோணம் (மகரம்)

20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் : திருதி கோகிலா மகேந்திரன் உளவளத் துணையாளர்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
பெண்களின் திருமணத்திற்கு முன்னான வாழ்க்கையும் திருமணத்திற்குப் பின்னான வாழ்க்கையும்...



**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : அறிந்தும் அறியாமலும் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் திரைப்படக் காட்சிகள்
4.30 மணி : டேக் இட் ஈசி




5.00 மணி : டிக் டொக்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : பத்துக்கு பத்து
6.30 மணி : நலம்தானா
**இரவு**
7.00 மணி : சொற்சமர்
சினிமாவின் பிரதிபலிப்பே சமூகம்
சமூகத்தின் பிரதிபலிப்பே சினிமா




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சாட்சியம்
9.30 மணி : நட்சத்திர கொமடி
10.00 மணி : யாவரும் கேளீர்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் யோகிபாபு நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN TELEVISION

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
**இரவு**
7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : 10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல் மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) அளவியல்
10.00 மணி : பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல
**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்
**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த உயர் தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : ஆலயப் பாடலகள்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்
**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.11.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.